## இயல் 2

# பெண்ணியம் - ஓர் அறிமுகம்



# இயல் 2

# பெண்ணியம் - ஓர் அறிமுகம்

2.0 முன்னுரை

2.1 பெண்ணியம் — விளக்கம்

- 2.1.1 மிதவாதப் பெண்ணியம்
- 2.1.2 தீவிரவாதப் பெண்ணியம்
- 2.1.3 சோசலிசப் பெண்ணியம்

2.2 பெண்ணியப் படைப்புகள்

2.3 உலக அளவில் பெண்ணியம்: தோற்றமும் வளர்ச்சியும்

- 2.3.1 தொடக்ககாலப் பெண்ணியம்
- 2.3.2 பிற்காலப் பெண்ணியம்

2.4 அமெரிக்கப் பெண்ணியம்

2.5 இங்கிலாந்தில் பெண்ணியம்

2.6 இந்தியப் பெண்ணியம்

- 2.6.1 வேதகாலப் பெண்ணியம்
- 2.6.2 சங்ககாலப் பெண்ணியம்
- 2.6.3 இலக்கியங்களில் பெண்ணியம்
    - 2.6.3.1 திருக்குறள்
    - 2.6.3.2 சிலப்பதிகாரம்
    - 2.6.3.3 பெரியபுராணம்
- 2.6.4 இந்தியாவில் மேலைநாட்டுப் பெண்ணியத்தின் தாக்கம்

2.7 இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம்

2.7.1 விடுதலைப் போராட்டக் காலப் பெண்ணியம்

2.7.2 விடுதலைக்குப் பின் பெண்ணியம்

2.7.3 இருபத்தோராம் நூற்றாண்டு காலப் பெண்ணியம்

2.7.3.1 பண்பாட்டு விடுதலை

2.7.3.2 பொருளாதார விடுதலை

2.7.3.3 பாலியல் விடுதலை

2.8 தொகுப்புரை

# இயல் 2
# பெண்ணியம் - ஓர் அறிமுகம்

## 2.0 முன்னுரை

உலகம், தோன்றியது முதல் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாக சமுதாய அமைப்பு தோன்றியது. சமுதாயம் என்பது ஆண்களும் பெண்களும் பிற உயிர் உள்ளனவும் அல்லனவும் இயற்கையும் நிறைந்த ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பிற்கு இருபாலரும் தங்கள் பங்களிப்பையும் புதிய புதிய சிந்தனைகளையும் முயற்சிகளையும் தொடர்ந்து வழங்கி வந்துள்ளனர். இதன் மூலம் சமுதாயம் பெரும் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதை வரலாறு, கலை மற்றும் இலக்கியங்கள் மூலமாக அறியமுடிகிறது.

மனிதன் சமூகமாக வாழத் தொடங்கிய போது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ்ந்தார்கள். குறிப்பாக பொருள் உற்பத்தியோடு உயிர் மறு உற்பத்தியினை தன் உடலியல் வாய்ப்பால் பெற்றிருந்த பெண், சமுதாயத்தில் முன்னுரிமை பெற்றவளாக விளங்கினாள். இதனால் ஏற்றத் தாழ்வுகள் தோன்றவில்லை. ஆனால் கால வளர்ச்சியால் சமூக மாற்றம் பெறுகின்றபோது ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். பொருளியல் சார்ந்த உற்பத்தியும் உரிமையும் ஆணின் கைக்கு வராத சூழலில் பெண்ணே தலைமை தாங்குபவளாக இருந்துள்ளாள். இதனால் சமூகஅமைப்பு தாய்வழிச் சமுதாயமாக மாற்றம் பெற்றது. இதில் பெண்கள் அதிகாரம் பெற்றவர்களாகவும், உயர்வானவர்-களாகவும் மதிக்கப்பட்டனர். அப்போது பெண்கள், இயற்கையின் சக்தி பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். இதனால் பெண்கள் இறைவனுக்கு இணையானவர்களாகவும் ஆண்களால் வணங்கப்படும் உயர்வு கொண்டவர்களாகவும் விளங்கினர் என்பதை இலக்கியங்கள் விளக்கிச் செல்கின்றன.

மகப்பேறு காங்களில் பெண்களின் பாதுகாவலர்களாகவும், பணியாளர்களாகவும் செயல்பட்டு வந்த ஆண்கள், தொடர்ந்து ஏற்பட்ட சமுதாய மாற்றத்தாலும் வளர்ச்சியாலும் மேலும் பல புதிய கருத்துக்களைப் புரிந்து கொள்ளத் தொடங்கினர். அதாவது மனித இன மறுஉற்பத்திக் காரணிகளில் ஆணின் பங்கு அவசியம் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். இதனால் பெண்களின் மீது உடல் சார்ந்த அதிகாரம் செலுத்தத் தொடங்கினான்; அடக்கி ஆளவும் தொடங்கினான். உடற் கூறு அமைப்பினாலும். உடல் சார்ந்த பலவீனங்களின் காரணமாகவும் பெண், ஆணின் கட்டுப்பாட்டுக்குள் வாழத் தொடங்கினாள். இதை பாதுகாப்பாகவும் உணரத் தொடங்கினாள். இதனைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட ஆண், பெண்ணை படிப்படியாக அடிமைப்படுத்தத் தொடங்கினான். இதில் அவன் முழுமையாக வெற்றியும் பெற்றுள்ளான் என்பதை அறியலாம்.

பெண்கள் அடிமைப்படுத்தப்பட்ட போதும் இந்த அடிமைத்-தனத்திலிருந்து விடுபடுவதற்காக அவள் போராடவும் தொடங்கிவிட்டாள். பெண்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவதும் குரல் எழுப்புவதும் பெண்ணியக் கருத்தாக விளக்கப்படுகின்றது.

பெண்ணியம் - ஓர் அறிமுகம் எனும் இந்த இயல்

1. பெண்ணியம்: விளக்கம்
2. உலக அளவில் பெண்ணியம் — தோற்றமும் வளர்ச்சியும்
3. இந்தியாவில் பெண்ணியத்தின் தாக்கமும் வளர்ச்சியும்
4. இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம்

என்ற தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

## 2.1 பெண்ணியம்: விளக்கம்

பெண்கள், சமுதாயக் கட்டுப்பாடுகளாலும் அழகுணர்ச்சியினாலும் அடக்கி வைக்கப்பட்டுள்ளனர். பண்பாட்டு அடிப்படையிலான இந்த அடக்கு முறையில் இருந்து வெளிவருவதே பெண்விடுதலையாகும். இந்த

விடுதலையை நோக்கிய செயல்பாடுகளே பெண்ணியமாகக் கருதப்படுகின்றது. "அறக்கோட்பாட்டிலிருந்து விலகாமல் தங்களுக்கான உரிமைகளைப் பெறுவதே பெண்ணியக் கோட்பாடாகும்"[1] எனலாம்.

பெண்விடுதலையை முன்னெடுத்துச் செல்வது மிகப்பெரும் சவாலாகவே அமைகின்றது. "பெண்களின் பிரச்சினைகள் எவையாகிலும் அவை சமுதாயப் பிரச்சினைகளாகக் கருத்தில் கொள்ளப்படுவதில்லை".[2] மாறாக பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான ஒன்றாகவே விளக்கப்படுகின்றது. உண்மையில் "பெண்ணியம் ஆணாதிக்கத்தை எதிர்க்கின்றதேயன்றி; அது ஒரு போதும் ஆண்களை எதிர்ப்பதில்லை".[3] அதுபோல் பெண் விடுதலை என்பதை கட்டுப்பாடற்ற பாலியல் உறவு என்றும் பொருள் கற்பிக்கப்படுகின்றது. இதனால் பெண், தவறாக வழிநடத்தப்படுவதும் ஏற்படுகின்றது. இவை பெண்விடுதலையை இயக்கமாகக் கொண்டு செல்வதில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகும். இதனால் பெண்விடுதலையை பெண்ணிய இயக்கங்கள் மிகக் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டியது கட்டாயமாகின்றது.

சமுதாய அக்கறையும் ஒழுக்க நெறியும், பண்பாடும் பெண்களுக்கு மட்டுமே என்கிறது ஆணாதிக்கச் சமுதாயம். இதனால் பெண்கள் மீது கட்டுப்பாடுகளைத் திணிக்கின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தின் மீது கோபம் கொள்ளும் பெண்ணியம், இந்தக் கட்டுப்பாடுகளை ஆண்களுக்குமானதாக நிலைநிறுத்த முயற்சிக்கவேண்டும்; அவ்வாறு இல்லாமல் சமுதாயக் கட்டுப்பாடுகளைத் தாண்டிச் செல்வதே-மீறுவதே விடுதலையாகக் கருதினால் அது சமுதாயச் சீர்கேட்டை ஏற்படுத்துவதாகவே அமையும். "பெண்ணியம் என்பது பெண்ணுக்கு எதிராக எழும் எந்த ஆயுதத்தையும் முறியடித்து அவளுக்குத் தனித்துவம் உண்டு என்பதை அனைவரும் உணரச் செய்வது"[4] ஆகும்.

"தாய்வழிச் சமுதாயமாக விளங்கிய காலத்தில் பெண்கள் எல்லா நிலையிலும் முதன்மை பெற்றிருந்தனர்"[5] அந்த முதன்மையிடத்தை மீண்டும்

ஏற்படுத்த முயற்சிப்பதே பெண்ணியத்தின் நோக்கமாக அமைய வேண்டும் எனலாம். அரசியல், அதிகார நிறுவனங்கள் முதலிய துறைகளில் பெண்களைப் பங்கெடுத்துக்கொள்ளச் செய்வதையே இறுதியான நிலையாகக் கொண்டு, பெண்விடுதலை இயக்கங்கள் செயல்படுகின்றன.

பெண்ணியம், பெண் விடுதலை குறித்த இயக்கங்களும் உரையாடல்களும் வளர்ச்சிபெற்று வளர்ந்து கொண்டிருக்கும் இக்கால-கட்டத்திலும் பெண்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பெண்கள் பணிசெய்யும் இடங்களிலும் பொது இடங்களிலும் பாலியல் தொடர்பான இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. "பெண்களை பலவந்தமாக வன்புணர்ச்சிக்கு உள்ளாக்குதல் காலம் காலமாகத் தொடர்ந்து வரும் பெண்களுக்கெதிரான வன்முறைக் கொடுமையின் உச்சகட்டம் எனக் கொள்ளவேண்டும்".[6] பெண் மீதான இந்தப் பாலியல் வன்முறை வெளியில் இருந்து மட்டுமல்லாது, உறவுகளுக்குள் இருந்தே மிக அதிகமாக ஏற்படு-கின்றது என்பதைப் பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

பெண்கள் மீதான பாலியல் வன்முறை அல்லது எல்லை மீறல் அவர்களுக்கு உளவியல் சார்ந்த பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. உணர்வு நிலை (Sensitive) கல்வியையும் பகுத்தறிவுச் சிந்தனையையும் திறனையும் வெளிப்படுத்த முடியாமல் தடை செய்கின்றது; அறியாமையும் ஏற்படுகின்றது. அதாவது "அறியாமை அவள் குற்றமன்று அத்தகைய சூழலுக்கு அவளை ஆளாக்கியது ஆணின் குற்றமே"[7] என்கிறார் மேரி வுல்ஸ்டன் கிராப்ட்.

பெண்ணியம், குடும்பம் சார்ந்த பெண்ணியம், சமூகம் சார்ந்த பெண்ணியம், உலகியல் சார்ந்த பெண்ணியம் என வகைப்படுத்தப்-படுகின்றது. "ஆணாதிக்கம் குடும்பத்தில் தொடங்குகின்றது. எனவே பெண்ணியம் தீவிரமாகச் செயல்பட வேண்டிய முதல் தளம் குடும்பமே ஆகும்".[8] தந்தை, அண்ணன், தம்பி, கணவன் என பெண், குடும்ப ஆண்களால் கட்டுப்படுத்தப்படுகின்றாள். "பெண்கள், குடும்பத்தினரால் நசுக்கப்படுகின்றார்கள். அவர்களின் உழைப்பை மதிப்பிழக்கச் செய்கின்றார்கள்.

கணவனையே முழுவதும் சார்ந்திராமல் அவனுக்குச் சமமான உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைப் பெறவேண்டும்”[9] என்பதை வலியுறுத்தி உள்ளார் மேரிவுல்ஸ் கிராப்ட். இதுபோல் குடும்பத்தில் நடைபெறும் அடக்குமுறைக்கு எதிராகப் பெண், குரல் கொடுக்கத் தொடங்கினால் அது குடும்பம் சார்ந்த பெண்ணியமாகக் கருதப்படுகின்றது.

குடும்பம் என்ற நிலையைக் கடந்து, சமூகத்தில் நடைபெறும் பெண்கள் மீதான பண்பாட்டு விலங்கை உடைக்கும் முயற்சியில் ஈடுபடும் பெண்ணின் செயல் சமூகம் சார்ந்த பெண்ணியமாகக் கருதப்படும். உலகம் முழுவதும் உள்ள பெண்களுக்காகப் போராடும் பெண்ணின் குரல் உலகம் சார்ந்த பெண்ணியமாகக் கருதப்படும்.

பெண் விடுதலைக்காக எழுப்பப்படும் குரல், அதன் தன்மையைக் கொண்டு பத்திற்கும் மேற்பட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

- “மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)
- தீவிரவாதப் பெண்ணியம் (Radial Feminism)
- சோசலிசப் பெண்ணியம் (Socialist Feminism)
- ஆன்மிகப் பெண்ணியம் (Spiritual Feminism)
- கிருத்தவப் பெண்ணியம் (Christian Feminism)
- கலாச்சாரப் பெண்ணியம் (Cultural Feminism)
- மனைப் பெண்ணியம் (Domestic Feminism)
- தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism)
- கருப்புப் பெண்ணியம் (Black Feminism)
- சூழல் பெண்ணியம் (Eco-Feminism)”[10]

என்பனவாகும்.

### 2.1.1 மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)

பெண்கள் உரிமைகளுக்காக அவர்கள் குரலைப் பதிவு செய்த இடம் மிதவாதப் பெண்ணியம் ஆகும். இதனால் “இதைப் பெண்ணியத்தின் முதல் அலை என்றும் கூறுவர்”.[11] இதனை தொடக்ககாலப் பெண்ணியமாகக் கருதலாம். இதில் பெண்கள் அவர்களின் உரிமை-களுக்காகப் போராடவில்லை. ஆனால் அவர்களது கருத்துகளைப் பதிவு செய்யத் தொடங்கினார்கள் எனலாம்.

மிதவாதப் பெண்ணியத்தில் பெண்களின் பிரச்சினைகளைப் பெண்கள் முழுவதுமாக அறிந்து கொள்வதில் கவனம் செலுத்தினர். அதை சமுதாயத்திற்கு உணர்த்துவதே இதன் செயல்திட்டமாகக் கொண்டிருந்ததை அறியலாம். பணி செய்யும் பெண்களுக்குச் சரியான ஊதியத்தை நிர்ணயித்தல், கல்வி வேலை வாய்ப்புகளில் சமநிலையில் உரிமையைப் பெற்றுத்தருதல் முதலியன இதன் பணியாக இருந்தது. “இந்த மிதவாதப் பெண்ணியம் சீர்திருத்தவாதக் குணாம்சமுடையது”.[12] ஆனால் அதை அடையும் முயற்சியில் போராட்ட குணமும், தீவிர நிலைப்பாடும் கொண்டிருக்கவில்லை என விளக்கலாம்.

மிதவாதப் பெண்ணியம், குடும்பமும் குடும்ப உறவுகளும் பெண்களுக்கு அவசியம் என்பதையே வலியுறுத்தியது. பெண் விரும்பினால் சமூகம் அவளைப் பொருளீட்ட அனுப்பலாம். ‘பெண்களுக்கு வீடும் முக்கியம்’ என்று பெண்ணின் உரிமைக்காகக் குரல் எழுப்பிய ஜான் ஸ்டூவர்ட் மில்லே கூறுகின்றார்.

### 2.1.2 தீவிரவாதப் பெண்ணியம் (Radial Feminism)

தீவிரவாதப் பெண்ணியலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். பெண்களின் உரிமையைப் பெறுவதற்கு வன்முறையிலும் ஈடுபட்டனர். இதில் குடும்பம், உறவு, சமாதானம் என்பவை அந்நியமாக்கப்பட்டன. பெண்களின் உரிமைகளைத் தடைசெய்வதிலும், இடையூறாக இருப்பதிலும் குடும்பம்,

உறவு, சமாதானம் என்பவை பெரும்பங்கு வகிப்பதாகத் தீவிரவாதப் பெண்ணியலாளர்கள் எண்ணினர்.

தீவிரவாதப் பெண்ணியம் திருமணம், குழந்தைப்பேறு ஆகிய-வற்றை முழுமையாக எதிர்த்தது. குறிப்பாக, ஆண்களை முழுமையாகச் சமூகத்தில் இருந்தே அகற்றிவிடவேண்டும் என்ற எண்ணம் கொண்டதாக இருந்தது. "பெண்களுடன்தான் பெண்கள் பாலுறவு கொள்ள வேண்டும் என்றும் ஆணுடன் பாலுறவு கூடாது"[13] என்றும் விளக்குவதன் மூலம் தீவிரவாதப் பெண்ணியத்தின் தீவிரக் கொள்கையை அறியலாம்.

தீவிரவாதப் பெண்ணியம், ஆண்களைவிட பெண்கள் உயர்வானவர்கள் என்பதை நிலைநிறுத்த முயற்சிக்கின்றது. சமூகத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் பெண்களுக்குக் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது தீவிரவாதப் பெண்ணியத்தின் நோக்கமாக இருப்பதை அறியலாம். "தீவிரவாதப் பெண்ணியத்தை ஆதரித்து எழுந்த பெண்ணியவாதிகளின் கருத்தாக்கங்கள் இரண்டாம் பெண்ணிய அலை உருவாகக் காரணமாயின"[14] என மேலும் விளக்கலாம்.

### 2.1.3 சோசலிசப் பெண்ணியம் (Socialist Feminism)

சோசலிசப் பெண்ணியம் புரட்சியை அடிப்படையாகக் கொண்ட-தாகும். சமுதாயத்தைப் பொருளாதார அடிப்படையிலானதாக மாற்றுவதன் மூலமே பெண்களுக்கான விடுதலையைப் பெறமுடியும் என்பது சோசலிசப் பெண்ணியத்தின் நம்பிக்கையாகும். எனவே பெண்களைப் பணியில் அமர்த்தும் முயற்சியை முன்னெடுத்துச் சென்றது. பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக "கார்ல் மார்க்ஸ், ஃபிரடரிக் ஏங்கல்ஸ் ஆகியோர் முன்வைத்த சித்தாந்தத்தை அடியொற்றி நிகழ்ந்த சோசலிசப் புரட்சியோடு தோற்றம் கொண்டதுதான் சோசலிசப் பெண்ணியமாகும்".[15]

பெண்கள் "கல்வி, உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பெற்றிருந்தும் ஆணின் சமூக நிலைக்கு ஏற்ப இல்லாமல் தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றாள்"[16] என்று கருதிய பெண்ணியம், அதை பெண்களுக்கு

உணர்த்தத் தொடங்கியது. பெண்கள் அனைத்துத் துறைகளிலும் பணிக்குச் செல்லவேண்டும். ஆண்களுக்கு இணையாக பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கினார்கள். இதனால் பெண்கள் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகவும் பணி செய்யத் தொடங்கினார்கள். ஆனால் பெண்ணியம் எதிர்பார்த்ததுபோல் பொருளீட்டும் தளத்திலும் பெண்விடுதலை எளிதானதாக இருக்கவில்லை. தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் பெண்கள் ஆணாதிக்கத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையே இருந்தது.

பெண்களின் உழைப்பு, குடும்பத்தில் மட்டுமல்லாது சமுதாயத்திலும், தொழிற்சாலைகளிலும் சுரண்டப்படுகின்றது. மிகக் குறைந்த ஊதியத்தில் பெண்கள் பல தொழிற்சாலைகளில் பணிக்கு அமர்த்தப்படுகின்றார்கள். முதலாளித்துவத்தால் பெண்களின் உழைப்பு மதிக்கப்படவில்லை. இதை உணர்ந்த சோசலிசப் பெண்ணியம், பெண் தொழிலாளர்களுக்காகப் போராடத் தொடங்கியது. ஆண்களுக்கு இணையான ஊதியம் பெண்களுக்கும் வழங்கவேண்டும் என வலியுறுத்துகின்றது.

கல்வி, வேலை வாய்ப்பு, சமூக உரிமைகள் ஆகியவற்றில் பெண்களுக்குச் சமஉரிமையைப் பெற்றுத்தருவதற்காகப் போராடும் போராட்ட குணம் கொண்டதே சோசலிசப் பெண்ணியமாகும்.

இன்றையப் பெண்ணியம் பல வகைகளைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியான குணங்களையும் கொள்கைகளையும் கொண்டதாக வளர்ச்சி பெற்று வருகின்றது. பெண் இனத்தின் உரிமைக்காகப் போராடுவதில் இவை அனைத்தும் ஒரே விதமான கொள்கையோடு பொதுத்தன்மை கொண்டதாகவும் விளங்குவதைக் காணலாம்.

பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடவேண்டும். சமுதாய மாற்றத்திற்கான போராட்டங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். சமூக நீதிக்கான படைப்புகளையும் பெண்கள் உருவாக்கவேண்டும் என்பது பெண்ணியக்

கோட்பாடாகும். இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டிலும் பெண்கள் தங்களுக்கான பாதையில் மிகச் சரியாக பயணிக்கின்றார்கள் என்பதை பெண்ணியப் படைப்பாளர்களின் படைப்புகளின் வழி அறியலாம்.

## 2.2 பெண்ணியப் படைப்புகள்

இலக்கியங்கள் பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகங்களாக இருந்து வருகின்றன. பெண்ணின் உணர்வுகளையும், அநீதியை எதிர்க்கும் வீரத்தையும் தமிழ் இலக்கியத்தில் முதல் முதலாகப் பதிவுசெய்த இலக்கியம் சிலப்பதிகாரம் எனலாம். இதன் கதைத் தலைவியான கண்ணகி மூவேந்தர்களில் ஒருவனான பாண்டிய வேந்தனையே எதிர்த்துப் போர் தொடங்கி அதில் வெற்றியும் பெறுகின்றாள்.

இலக்கியங்கள் தொடர்ந்து பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளன. இந்த வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் பெண்ணியக் கருத்துக்களை அழுத்தமாகப் பதிவு செய்தவர் பாரதியார் ஆவார். இவரது கவிதைகள், பெண்களைச் சுயமாக சிந்திக்க வைத்தன. கற்பு என்பதை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம் என்று சமத்துவக் குரல் எழுப்பினார். பாரதிதாசனும் தனது கவிதைகளில் பெண்களுக்கான விடுதலையைப் பதிவு செய்துள்ளார். இலக்கியங்களில் பெண்ணியக் கருத்துகள் இருந்தாலும் அவை பெண்ணின் குரலாக இருக்கவில்லை என்பது பெண்ணியலாளர்கள் கருத்தாக உள்ளது.

இன்றைய படைப்புச் சூழல் பெண்ணியத்திற்கு ஏராளமான தளங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. இதனைப் பயன்படுத்தி பெண் படைப்பாளர்களும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்து வருகின்றனர்.

பெண்ணியத்தின் குரல் இன்று ஓங்கி ஒலிக்கத் தொடங்கி உள்ளது. அவர்களின் குரல் அதிகாரத்திற்காகவும், ஆயுதங்களுக்காகவும் அச்சம் கொள்வதில்லை. தன்னுடைய வீடு, ஊர், நாடு எனக் குறுகிய வட்டத்திற்குள்ளும் நின்றுவிடுவதில்லை. உலகளாவிய பெண்ணியமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அமெரிக்கப் படையினரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆட்பட்ட சிறுமிக்காகக் குரல் கொடுக்கின்றார் வனப்பேச்சி என்ற கவிதைப் படைப்பில் தமிழச்சி தங்கப்பாண்டியன்,

*"பால்யத்தின் சுவடு மாறாத உன்னில்*
*அதிகாரத்தின் பிடியொன்றும்*
*ஆணின் திமிர்ப் பொன்றும்*
*ஆழப் பதிந்தன*
*உனக்கு அந்நியமாகிப் போன*
*ஆறாவது விரலாய்*
*சதைக் கோளமென உன் உடல்சரிவதை*
*உன் ஆறுவயது சகோதரி பார்க்கையில்*
*இருவரும் பகிர்ந்திருந்த இனிப்பொன்றின்*
*மிச்சமிருந்தது அவர் கடைவாயில்*
*பூமியும், பெண்ணும் பிடுங்கி*
*வன்புணரப்படுதலைப் பேச்சற்றுப் பார்த்திருந்தனர்*
*தன் முக்காடு பற்றிய உன் அம்மாவும்*
*துப்பாக்கி முனையில் உன் அப்பாவும்*
. . . . . . . . . . . .
*சம்பவத்திற்கான சாட்சியாகப்*
*புறாக்களின் சிறகசைவு*
*அல்லது*
*ஒரு கவிதை மட்டுமே"*[17]

அதிகாரம் மிக்கவர்களால் நடத்தப்பட்ட பாலியல் வன்-கொடுமையை இவ்வாறு துணிச்சலாகப் பதிவு செய்கின்றார். இக்கவிதையில் அநீதியைக் கண்டு எதிர்ப்புத் தெரிவிக்காத சமூகத்தையும் அவர் சாடுகின்றார். சாட்சியாக இருப்பது 'புறாக்களின் சிறகசைவு அல்லது ஒரு கவிதை' என்று முடிக்கின்றபோது அவரின் ஆதங்கம் கவிமனதாக வெளிப்படுகின்றது.

பெண் மீதான தாக்குதல் அவள் உடல் சார்ந்ததாகவே தொடங்குகின்றது. பெண்மையின் அடையாளங்களைக் கொண்டது உடம்பு

மட்டுமல்ல. பெண், உயிரும் உணர்வும் கொண்டவள். அவளுக்கென முழுமையான வாழ்க்கை உள்ளது. இதை சமுதாயத்திற்கு உணர்த்துவது பெண் இலக்கியவாதிகளின் முதல் போராட்டத்தளமாக உள்ளது. பெண்ணியப் படைப்பாளர்கள் அந்தப் பணியைப் பொறுப்புடன் மேற்கொண்டுள்ளார்கள் எனலாம்.

சமுதாயத்தில் பெண்ணின் உடல் அடிமைப்படுத்தப்படுவதை 'அவளை மொழிபெயர்த்தல்' என்ற கவிதை நூலில் 'மீட்சி' என்ற கவிதையில் முன்வைத்துள்ளார் சுகிர்தராணி

*"வாகனங்கள் விரையும் சாலைகளில்*
*பெருத்த வயிற்றுடன் திரிவாள்*
*நிர்வாண ஆடையின் குறுகுறுப்பு*
*அவளுள் கிளர்ந்ததில்லை*
*ஓடும் கழிவுநீரின் ஏடழித்து*
*நதியின் சுவையோடு பருகுவாள்*
*நிறம் தப்பிய கூந்தலில்*
*மலரின் உலர் இதழ்கள் மின்னும்*
*அவள் இருக்குமிடங்களில்*
*பாலிதீன் உறைகளின் கசங்கலோசை*
*தேங்கி நிற்கும்*
*சமயங்களில்*
*தொங்கிய முலைகளின் முனைகிள்ளி*
*விஷமெடுத்துக் கொண்டிருப்பாள்*
*மீந்த பருக்கைகளைத் தரையில் தேய்த்தபடி*
*ஓயாமல் பேசுமவள் சொற்களின் கோவை*
*இசைப் பாடலொன்றை நினைவூட்டும்*
*இரவுகளில் புழக்கமற்ற கட்டடத்தின்*
*இடிந்த சுவரோரம் உறங்கிப் போவாள்*

*விடிந்ததும் கிழிந்த யோனியோடு*

*மீண்டும் அவள் கைகளில்*

*எண்ணற்ற விரைப்பைகள்*"[18]

மனநிலை தவறிய, ஆதரவற்ற ஒரு பெண்ணின் இரவு எப்படிக் கழிகிறது என்பதைப் பதிவு செய்கின்றார். அவளை அழித்த உணர்வுகூட இல்லாத, அப்பெண்ணின் மீதான தாக்குதலை நிகழ்த்திய சமூகத்திற்கு உணர்த்துகின்றது இக்கவிதை.

பெண்ணியப் படைப்பாளர்கள், பெண் விடுதலை என்பது எங்கிருந்து தொடங்கவேண்டும் என்பதை அறிந்து, தங்கள் போராட்டத்தைத் தொடங்குகின்றார்கள். அனைத்துத் தளங்களிலும் அவர்களின் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இன்றைய பெண்ணியலாளர்கள் பெண்ணியம், பெண் விடுதலை என்பதன் பொருளை மிகச் சரியாகப் புரிந்து வைத்துள்ளார்கள் என்பதையும் பெண்களின் உள்ளத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் படைப்புகளை உருவாக்குகின்றார்கள் என்பதையும் அவர்களின் படைப்புகளின் மூலம் அறியலாம்.

## 2.3 உலக அளவில் பெண்ணியம்: தோற்றமும் வளர்ச்சியும்

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே பெண்கள் அதிகாரம் மிக்கவர்களாக இருந்தார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் வழி அறிய முடிகின்றது. மனித சமுதாயம் தோன்றிய காலம் முதல் ஆண்- பெண் என இனப்பாகுபாடு இல்லாமல் இருவரும் சம உரிமை உடையவர்களாக வாழ்ந்தனர். தாய்வழிச் சமுதாயக் காலத்தில் பெண்கள் உயர்வு பெற்றார்கள் என்பதை இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதற்கு தாய்வழிச் சந்ததி முறையே காரணமாக இருந்துள்ளது.

தாய்வழிச் சமூகத்தில் பெண்கள் அனைத்து வேலைகளிலும் ஈடுபட்டனர். அக்காலக் கட்டத்தில் ஒருவரின் தேவைக்காக மற்றவரைச் சார்ந்திருக்கும் நிலை இருக்கவில்லை. உணவிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் பெண்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். வேட்டை-

யாடுதலை இவர்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் ஆண் ஆதிக்கமோ, பெண் அடிமை என்பதோ இருக்கவில்லை. ஆனால் ஆயுதங்களைக் கையாளுவதில் ஆண் வலிமை பெற்றவனாக இருந்தான், அதன் மூலமும் தாய்வழிச் சமூகத்தின் பிற்காலத்திலும் பெண்ணை, ஆண் தன்வயப்படுத்தத் தொடங்கினான் எனலாம். இதனால் பெண், தான் அடிமைப்படுகின்றோம் என்பதை அறியாமலே ஆணுக்குக் கட்டுப்படத் தொடங்கினாள். அதை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டது ஆண் ஆதிக்கச் சமுதாயம். ஆனால், இது நீண்டகாலம் தொடரவில்லை. உடனடியாகத் தான் அடிமைப்படத் தொடங்கியதைப் பெண் சமுதாயம் உணரத்தொடங்கியது. இதன் காரணமாக அடிமைத்தனத்திலிருந்து விடுபடும் முயற்சியில் பெண் சமுதாயம் முழுவேகமாகவும், முழுபலத்துடனும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது என்பதை வரலாற்று ஆய்வுகள் வழிக் காணலாம்.

### 2.3.1 தொடக்ககாலப் பெண்ணியம்

தொடக்ககாலப் பெண்ணியம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டது எனலாம். சமுதாய அமைப்பு தோன்றியக் காலத்தில் பெண் குடும்ப அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டாள். அப்போது முதல் பெண் சமுதாயக் கட்டுப்பாட்டிற்குள் திணிக்கப்பட்டாள். அதற்கு முன்பாக ஆண், பெண் இருபாலரும் சமத்துவம் சுதந்திரம் ஆகியவற்றை இயல்பாகவே கொண்டிருந்தனர். தொடக்கக் காலத்தில் “மனித இனம் வரைமுறையற்ற புணர்ச்சியில் இருந்துதான் தொடங்கியது”[19] என்பது வரலாற்று ஆய்வுகள் கூறும் உண்மையாகும்.

ஆண்-பெண் பாலின உறவு எந்தவிதக் கட்டுப்பாடோ, திட்டமிடுதலோ இல்லாமல் இருந்தது. அன்றையக் காலத்தில் வரைமுறையற்ற பாலியல் உறவு தவறானதாகக் கருதப்படவில்லை. சந்ததிப் பெருக்கத்திற்குப் பெண்ணே முதன்மைக் காரணமாகக் கருதப்பட்டது. இதனால் பெண்ணின் மதிப்பு உயர்ந்திருந்தது. “தாய் படிமங்கள் கற்கால வாழிடங்கள் அனைத்திலும் காணக்கிடைப்பது; பொதுவாக பரந்துபட்ட

மானுடத் தோற்ற அம்சங்களையும் பெண்களின் சிறப்பையும் குறிக்கின்றது"[20] என்பதன் மூலம், பெண்களின் மதிப்பை உணரமுடிகின்றது. மேலும் "பெண்கள் தொடர்ந்து வேட்டையாடுதலில் ஈடுபட்டு தம் ஆயுத உபயோகத்தால் தம் சிறப்பை நிலைநாட்டி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர்".[21] அவ்வாறு தொடக்கக் காலத்தில் அதிகாரம் பெற்றிருந்த பெண்கள், சமுதாய அமைப்பு தோன்ற தொடங்கியது முதல் அடிமைப்படத் தொடங்கினர் எனலாம்.

ஆதிக்க சக்திகள் தோற்றுவித்த அமைப்பே சமுதாயமாகும் என்பது பெண்ணியச் சிந்தனையாளர்களின் கருத்தாகும். சமுதாயத்தில் "குடும்பம் என்பது ஒரு பாலின அடக்குமுறை வடிவமாகும்"[22] என்று பெண்ணியலாளர்கள் கருதினர். சமுதாய அமைப்பில் பெண்களுக்குப் பெண்மைப் பண்பு கற்பிக்கப்பட்டது. நாணம், அச்சம், மடம் என்பன பெண்களின் இயற்கையான பண்புகளாகக் கருதப்பட்டன. இதனால் "சமூகத்தில் பெண்கள் அமைதி நிலையில் அமரவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது".[23]

ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் உயிருள்ள ஒரு மனித வடிவம் என்ற நிலை மாறியது. அவள் ஆணின் ஒரு உடமைப் பொருளாக்கப்பட்டாள். பெண் பணயம் வைப்பதற்கும், ஈடுகட்டுவதற்கும் தேவையானால் விற்பனைப் பொருளாகவும் ஆக்கப்பட்டாள். இதனால் பெண் தனியாக வாழமுடியாத நிலை உருவானது. கணவனை இழந்தவள் வாழ உரிமையற்றவளானாள். அவளை வேறு ஆண் பயன்படுத்திவிடுவான் என்ற நிலை உருவானது. இது இறந்து போன கணவனின் குடும்பத்தாருக்கு அவமானத்தை ஏற்படுத்தியது. இந்த இக்கட்டிலிருந்து தனது குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ள இறந்து போனவனின் மனைவியைக் கொலை செய்ய எண்ணியது ஆணாதிக்கச் சமுதாயம். இதனால் 'சதி' என்ற வழக்கத்தை ஏற்படுத்தி உயிரோடு தீயில் தள்ளி எரித்தது. அடுத்த நிலையில் இந்தக் கொடுமைகளில் பெண் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்

என்பதற்காகப் பெண்ணை சிசுவிலேயே கொல்லத் தொடங்கியது. பெண் மீது ஏவப்படும் கொடுமைகளைக் கண்ட பெண் சமுதாயமே, பெண் சிசுக் கொலைக்கு உடன்பட வேண்டிய சூழல் உண்டானது. இப்படி பெண் சமுதாயத்தின் மீது மிகப்பெரும் அடக்குமுறையைத் திணித்து சுகம் கண்டது ஆணாதிக்கச் சமுதாயம் எனக் கூறலாம்.

அறிவியல் அறிஞர்கள் டார்வின், ஃப்ராய்டு போன்றவர்கள் பெண்களைக் குறைவாகவே மதிப்பிட்டார்கள். இதற்கு அவர்கள் அறிவியல் ஆய்வை துணையாகக் கொண்டார்கள். “டார்வின் ஆண் ஆதிக்கச் சுவடுகளைப் புத்திக் கூர்மையுடன் பெண்களின் மீது பதிக்கின்றார்”[24] என்று குறிப்பிடுகின்றார்கள் பெண்ணியலாளர்கள்.

தொடக்ககாலப் பெண்ணியம் ஓர் இயக்கமாக வெளிப்படவில்லை. பெண்களின் மீது திணிக்கப்பட்ட பண்பாட்டு கட்டுப்பாடுகளை அவர்கள் எதிர்த்தார்கள் என்பதைச் சில நிகழ்வுகள் மூலம் அறியலாம்.

சமுதாய அமைப்பில் பண்பாட்டு ரீதியாக அடிமைப்படுத்தப்பட்ட பெண்கள், தொடக்க நிலையிலேயே அதை உணரத் தொடங்கினார்கள். ஆணாதிக்கச் சமூகத்தின் மீதும் ஆண்களின் மீதும் கோபம் கொள்ளத் தொடங்கினார்கள். பெண்கள், ஆணாதிக்கச் சமூகத்தின் மீது கொண்ட கோபத்தை சமூகத்தின் மீது காட்ட வழி இல்லாது, அவர்களின் கணவர்களின் மீதே செலுத்தினார்கள் என்பதை வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகப்பகுத்தறிவுச் சிந்தனையாளர்களில் முதன்மை-யானவர் எனப் போற்றப்படும் சாக்ரட்டீஸ் அவரது மனைவியால் துன்புறுத்தப்பட்டார் என்பதை அவரது வரலாறு தெரிவிக்கின்றது. இது போல் தத்துவ அறிஞர்கள், அறிவியல் அறிஞர்கள் பலர் அவர்களது மனைவியரால் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதையும் வரலாறுகள் மூலம் அறியமுடிகின்றது.

பெண்களின் இது போன்ற செயல்பாடுகள் பெண்ணியத்தின் தொடக்கமாகக் கருதலாம்.

### 2.3.2 பிற்காலப் பெண்ணியம்

சமுதாய அமைப்பில், பெண்ணினம் நீண்ட நெடுங்காலமாக ஆணாதிக்கச் சமூகத்தால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. கடுமையான கட்டுப்பாடுகளுக்கும், பண்பாட்டு அடக்கு முறைகளுக்கும் ஆட்படுத்தப்-பட்ட பெண்ணினம் ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு எதிராக தனது எதிர்ப்பையும், கோபத்தையும் ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்தியே வந்தது. ஆனால் இயக்கமாகவோ எழுச்சி மிகுந்ததாகவோ அது இருக்கவில்லை.

தொடக்ககாலப் பெண்ணியத்திலிருந்து முழுவதுமாக வேறுபட்டு எழுந்தது பிற்காலப் பெண்ணியம். இது பெண்களின் மீதான தாக்குதலை அனைத்து விதங்களிலும் எதிர்கொண்டது. அத்துடன் இல்லாமல் இக்காலப் பெண்ணியம் எதிர்த்தாக்குதலையும் தொடுத்தது. பெண்ணியவாதிகளின் செயல்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டது; திட்டமிடப்பட்டது. ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடிய பெண்கள் இதன் அடுத்த கட்டத்தை நோக்கிச் சென்றார்கள். கல்வி, வேலை வாய்ப்பு, சொத்துரிமை போன்ற உரிமைகளைப் பெறுவதிலும் வாக்குரிமை ஆட்சிப் பொறுப்பில் பங்கு போன்ற அதிகார மையத்தை நோக்கியும் அவர்களது செயல்திட்டங்கள் பரந்து விரிந்து அமைந்தன.

பிற்காலப் பெண்ணியத்தில் அவர்கள் பெண்களுக்கான பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். அதை மற்றவர்களும் புரிந்து கொள்ளும் விதமாக, விளக்கவும் செய்தார்கள். இதனால் பெண் விடுதலை என்பதும் பெண்ணியம் என்பதும் அர்த்தமுள்ளதாக சமூகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிற்காலப் பெண்ணியம் என்பது 17ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கிய பெண்ணியத்தைக் குறிப்பதாகும். இக்காலக்கட்டத்தில் தோன்றிய மேலை நாட்டுப் பெண்ணியமாக அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பெண்ணியத்தின் வளர்ச்சியைக் குறிப்பாகக் காட்டலாம்.

## 2.4 அமெரிக்கப் பெண்ணியம்

பெண்ணியம் அதன் வளர்ச்சிப் பாதையில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் புதிய மாற்றங்களையும் மறுமலர்ச்சியையும் பெற்று வளர்ந்து வருகின்றது. இதில் 17ஆம் நூற்றாண்டினைப் பெண்ணியக் கோட்பாட்டிற்கு ஒரு சிறப்பான காலமாகக் கொள்ளலாம். "17ஆம் நூற்றாண்டில் 'பெண்ணியம்' என்ற சொல் முதன் முதல் உபயோகிக்கப்பட்டது".[25] பெண்ணியம் என்பது பெண் விடுதலை இயக்கத்தை தலைமையேற்று நடத்துவதும் பெண்ணின் உரிமைகளைப் பெற்றுத் தருவதும் ஆகும் என்று விளக்கப்பட்டது.

பெண்களின் உரிமைகள் பற்றிய முதல் அறிக்கை 1848-ல் செனகாஃபாலில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இங்கிலாந்தில் திருமணமான பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. நியூயார்க் செனகாஃபாலில் நடைபெற்ற மாநாடு பெண்ணியப் புரட்சியாகவே அமைந்தது. இந்தப் புரட்சி ஐரோப்பிய நாடுகளுக்கு விரைவாகப் பரவியது. இந்த மாநாட்டில் பெண்ணியக் கருத்துகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றினர். இத்தீர்மானங்கள் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக இருந்தது. அத்துடன் ஆணாதிக்கத்திற்கு எதிரானதாகவும் அம்மாநாடு இருந்தது.

இம்மாநாட்டுத் தீர்மானத்தில் ஒன்றாக, பெண்களுக்கு ஓட்டுரிமை கோருதல் இடம் பெற்றது. இம்மாநாட்டுக் கோரிக்கைக்காகத் தொடர்ந்து பெண்ணிய அமைப்புகள் போராடின. இதன் பயனாக 1920-ல் அமெரிக்கப் பாராளுமன்றம் கொண்டு வந்த சட்டத்திருத்தம், பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கியது.

பெண்ணியப் போராட்ட இயக்கங்களுக்கும் அதன் தலைவர்-களுக்கும் இது ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது. இதனால் பெண்களின் உரிமைக்கான போராட்டங்களுக்கும் அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களுக்கும் பெண்கள் தாராளமாக முன் வந்தனர். தொடர்

போராட்டங்களின் காரணமாக "அமெரிக்க ஜனாதிபதி ஜான்சன் அரசாங்கத்திற்குப் பாலியல் வேறுபாடு கூடாது என்ற ஒரு ஆணையைப் பிறப்பித்தார்".[26] இது பெண் விடுதலை இயக்கத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகும். இந்த வெற்றி உலக வரலாற்றில் பெண்ணியத்திற்கு ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

பெண்கள் பல்வேறு துறைகளிலும் பணியில் சேர்ந்தனர். அமெரிக்க ராணுவத்திலும் அலுவலகப் பிரிவிலும் பெண்கள் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இவர்களுக்கு ஆண்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படவில்லை. இதனால் தொடர்ந்து சமமான ஊதியத்திற்காகவும் போராடினார்கள். ஆனால் பணிக்குச் செல்வதை நிறுத்தவில்லை. கல்வியிலும் பெண்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள். பல்கலைக்கழகங்களிலும் அவர்கள் பங்கு கொள்ளவேண்டும் எனப் போராடி வெற்றிபெற்றனர்.

பெண்கள், ஒரு புறம் விடுதலைப் போராட்டங்களிலும் உரிமைப் போராட்டங்களிலும் வெற்றி பெற்று வந்தார்கள். மறுபுறம் பெண்களின் அழகையும் கவர்ச்சியையும் முதன்மையாகக் கொண்டு விளம்பரங்கள், வியாபாரங்கள் நடப்பதும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. இதன் ஓர் அங்கமாக அழகிப் போட்டி நடைபெற்று வந்தது. இதனை எதிர்த்து பெண்ணிய இயக்கங்கள் பெரும் போராட்டங்களை நடத்தின. 1968 செப்டம்பரில் 'மிஸ் அமெரிக்கா' போட்டி நடந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகப் பெண்களின் கவர்ச்சியைக் காட்டும் பொருட்களான உள்ளாடைகள், அழகு சாதனப் பொருட்களை பெண்ணிய இயக்கங்கள் தீயிட்டுக் கொளுத்தின. இந்தப் போராட்டம் "உள்ளாடை எரிப்புப் போராட்டம்" என வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டது.

அமெரிக்க வரலாற்றில் பெண்கள் தொடர்ந்து போராடி, அவர்களின் உரிமைகளைப் பெற்று வருகின்றனர். அமெரிக்கப் பெண்களின் போராட்டமும், அவர்களின் வெற்றியும் உலகம் முழுவதும் பரவுகின்றன. இதனால் அமெரிக்கப் பெண்களின் போராட்டம் உலகம் முழுவதும்

தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அதன் வீரியம் உலகம் முழுவதும் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதை நாம் காணலாம்.

## 2.5 இங்கிலாந்தில் பெண்ணியம்

உலகளாவிய பெண்ணியத்தின் தோற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்போது இங்கிலாந்தின் பெண்ணியத்தைப் பற்றிய கருத்துகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். உலகப் பெண்ணிய வரலாற்றில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஒரே காலக்-கட்டத்தைக் கொண்டிருப்பதைக் கணலாம். இங்கிலாந்தில் பெண்ணியத்தின் தொடக்கம் 1840 என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இங்கிலாந்தில், அமெரிக்கப் பெண்ணியப் போராட்டத்தின் தாக்கம் அதிகமாகவே ஏற்பட்டது. அமெரிக்கப் பெண்ணிய இதழ்கள் இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்றன. இதனால் இங்குப் புதிய இலக்கியங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. மேரி உல்ஸ்டன் கிராப்ட் எழுதிய ‘பெண்ணுரிமைக் கொள்கை நிறுவிடு’ (A Vindication of the Rights of Woman) ஜான் ஸ்டுவர்ட் எழுதிய ‘பெண்ணடிமைத்தனம்’ (The Subjection of Women) ஆகிய நூற்கள் பெண் விடுதலை இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்த நூற்களுள் முதன்மையானவை எனலாம்.

‘பெண்ணடிமைத்தனம்’ என்னும் நூல் பெண்களை அடிமைப் படுத்தும் சமுதாயத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. பெண் சுதந்திரமாக வாழவும் சுதந்திரமாகச் சுயமாக முடிவெடுக்கும் திறனைப் பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. இதனால் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் தன்மை பெற்றார்கள். இதனைத் தொடர்ந்து அந்நாட்டுப் பெண்கள் வாக்குரிமை பெற்றனர். இதற்காக அவர்கள் ஒரு நீண்ட தொடர் போராட்டங்களை நடத்த வேண்டி இருந்ததையும் வரலாறு வழிக் காணலாம்.

இங்கிலாந்துப் பெண்ணியவாதிகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்-கழகத்தில் 1970-ல் மிகப் பெரிய அளவிலான ஒரு பெண்கள்

கருத்தரங்கத்தைக் கூட்டினார்கள். அந்தக் கருத்தரங்கிற்குப் பின்னர், பெண்களின் கோரிக்கைகளுக்கு, அரசு அங்கீகாரம் வழங்கியது. இதனால் வேலை வாய்ப்பில் சம உரிமையும், சம ஊதியமும் வழங்கப்பட்டது. கல்வியிலும் பெண்களுக்குச் சமத்துவம் வழங்கப்பட்டது.

பண்பாட்டுக் கட்டுப்பாடுகளில் இருந்தும் பெண்கள் முழுவீச்சில் வெளிவரத் தொடங்கினார்கள். இதன் தொடக்கமாக, ட்ரபால்க்கர் சதுக்கம் ஊர்வலத்தைக் கூறலாம். பெண் விடுதலை மற்றும் பெண்ணியக் கோரிக்கைகளை வலியுறுத்தி 1971 மார்ச்சில் ஹைடு பார்க்கில் இருந்து ட்ரபால்கர் சதுக்கம் வரை ஓர் ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பெண்ணியப் பண்புகளாகச் சமுதாயம் கட்டமைத்திருந்த கட்டுப்பாடுகளில் இருந்து திட்டமிட்டு மாறுபட்டார்கள். புதிய முறையில் ஆண்களைப் போல் முடிவெட்டிக்கொண்டும், அரைக்கால் சட்டையும் அணிந்து கொண்டார்கள். அத்துடன் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெண்கள் அனைவரும் புகைபிடித்துக் கொண்டே சென்றார்கள். இவர்கள் குடும்ப உறவுகளையும் எதிர்த்தார்கள். இதனால் இந்த ட்ரபால்க்கர் சதுக்கம் ஊர்வலம் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அத்தோடு பெரும் பலனையும் பெற்றுத் தந்தது.

பெண்ணிய வளர்ச்சிக்காகப் பல்வேறு அமைப்புகள் தோன்றின. ஒவ்வொரு இயக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பை ஏற்படுத்திக் கொண்டன. இடைக்காலத்தில் சற்று தளர்வு ஏற்பட்டிருந்த பெண்ணிய இதழ்கள் இப்போது மீண்டும் வளர்ச்சி பெற்றன.

பாலியல் வேறுபாட்டின் காரணமாகத் தனித்தனியாகக் கட்டமைக்கப்பட்ட சட்ட திட்டங்களும் கண்டிக்கப்பட்டன. மதச் சடங்குகள் பெண்களைக் கட்டுப்படுத்துவது புரிந்துகொள்ளப்பட்டன. இதற்குப் பெண்கள் கல்வியில் அதிக ஈடுபாடு கொண்டதே காரணமாக அமைந்தது.

இங்கிலாந்துப் பெண்ணிய விடுதலையில் உயர்கல்வி முக்கியப்-பங்கு வகித்தது. பெண்கள், பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சியாளர்களாக

உயர்ந்தார்கள். பெண்கள் பிரச்சினைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அதற்குத் தீர்வுகளையும் முன் வைத்தார்கள்.

உலகப் பெண்ணிய வரலாற்றில் இங்கிலாந்தின் பெண்ணிய-வாதிகளின் பங்கு உயர்வான மதிப்புடையதாகக் கருதப்படுகின்றது.

## 2.6 இந்தியப் பெண்ணியம்

உலகத்தில் மனித இனத்தின் தொடக்கம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் போது இந்தியாவும் முதன்மை இடத்தில் இடம் பெற்றுவிடும் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இதன் மூலம் இந்தியாவின் தொன்மைத் தன்மையை அறியலாம். தொடக்ககால இந்தியாவின் பெண் சமுதாய வரலாறும் தாய்வழிச் சமுதாயமாகவே இருந்தது. தாய்வழிச் சமுதாயத்தில் பெண்கள் உயர்வானவர்களாக மதிக்கப்பட்டார்கள்.

சமுதாய மாற்றம் ஆண்களை உயர்வடையச் செய்தது. உலகின் பிறநாடுகள் போல, இந்தியாவில் பெண்களின் நிலை மோசமடைந்ததாகக் கூற இயலாது. ஆணாதிக்கச் சமுதாயமாக இந்தியா மாற்றம் கண்டபோதும் பெண்களுக்கான மதிப்பையும், தெய்வத்தன்மையையும் தொடர்ந்து கொடுத்து வந்ததைப் பார்க்கமுடியும். ஆனால் சமுதாயம் வழங்கிய இந்த மதிப்பும், தெய்வத்தன்மையுமே பெண் சமுதாயம் ஒடுக்கப்படுவதற்கும், அடிமைப்-படுத்தப்படுவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது என்பதை இலக்கியங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

இந்திய வரலாற்றில் ஆணாதிக்கச் சமுதாயம் உருவான போதும் பெண்கள் அவர்கள் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடினார்கள். அதிலே அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். இதை இந்திய வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் பெண்களைக் கொண்டு அறியலாம்.

இந்தியப் பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்கள் என்று கருத்தியல் அளவில் போற்றப்பட்டார்கள். ஆனால் பண்பாட்டு ரீதியாகவும், குடும்பம், உறவுகள் ஆகியவற்றின் மூலமாகவும் மிகப்பெரும் அடக்குமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் எதிர்கொண்டார்கள். இதனால்

இந்தியப் பெண்கள் பண்பாட்டு அடிமைகளாக மாற்றப்பட்டார்கள். இந்தப் பண்பாட்டுச் சமூக விலங்கில் இருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே, பெண்களுக்கு நீண்ட காலம் தேவைப்பட்டது. அதிலும் இந்தியப் பெண்கள் படைப்புத்திறனும், சிந்தனைத் திறனும் மிக்கவர்களாக இருந்துள்ளனர் என்பதும் இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

இந்தியப் பெண் விடுதலை, பெண்ணியக் கருத்துகளின் வளர்ச்சி என்பதை,

1. வேதகாலப் பெண்ணியம்
2. சங்ககாலப் பெண்ணியம்
3. இலக்கியங்களில் பெண்ணியம்

என்னும் தலைப்புகளில் விளக்கிக் காணலாம்.

### 2.6.1 வேதகாலப் பெண்ணியம்

இந்திய வரலாற்றுத் தொடக்கம் என்பது வேதகாலத்தில் இருந்தே கணக்கிடப்படுகின்றது. இந்த வேதகாலம் என்பது கி.மு. 5 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலமாகும். இந்த வேதகாலம் தாய்வழிச் சமுதாயத்திற்கு அடுத்த காலமாகக் கருதலாம். அதே வேளையில் தாய்வழிச் சமூகத்தின் தொடர்ச்சியும் தாக்கமும் இக்காலத்திலும் இருந்துள்ளன. இதை இக்காலத்தில் பெண்களுக்குச் சமுதாயம் வழங்கிய மதிப்பின் மூலம் அறியலாம்.

வேதகாலம் என்பது வேதங்கள் தோன்றிய காலமாக அறியப்படுகின்றது. அக்காலத்தில் தோன்றிய வேதங்கள் ரிக், யசூர், சாமம், அதர்வனம் ஆகியனவாகும். அதன் காரணமாகவே அக்காலம் வேதகாலம் என்றும் வழங்கப்படுகின்றது. இந்த வேதங்கள் மனித இனத்தின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான கோட்பாடுகளைக் கொண்டிருப்பதையும் காணலாம்.

“வேத காலத்தின் ஆரம்பத்தில் பெண்கள் உயர்வாக மதிக்கப்-பட்டனர். வாழ்க்கையின் எந்த மூலையைப் பார்த்தாலும் அவர்கள் ஆண்களுக்குச் சமமாகக் கருதப்பட்டார்கள்”[27] என்பதன் மூலம் பெண்களின்

சிறப்பான நிலையை அறியலாம். பெண்கள் பண்பாட்டுச் சின்னமாகக் கருதப்பட்டார்கள். இதனால் மதச்சடங்குகளில் பெண்கள் முக்கிய இடம் பெற்றார்கள். பெண்கள் கலந்து கொள்ளாத எந்தவொரு சமயம் சார்ந்த சடங்குகளும் செயல்பாடுகளும் முழுமை பெற்றதாக கருதப்படவில்லை. எனவே பெண்கள் இல்லாமல் எந்த சமயப் பண்பாட்டு நிகழ்ச்சியும் முடிவு பெறாது. இல்லறத்தான் தவம் செய்யச் சென்றால் கூட "மனைவியுடன் வந்துதான் தவம் செய்ய வேண்டும்"[28] என்று இறைவன் கூறியதாக விளக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இல்லறத்தில் இருப்பவன் அனைத்து நிலையிலும் மனைவியைப் போற்றவேண்டும் எனலாம்.

வேதகாலத்தில் பெண்கள் கல்வி, வேள்விகளிலும் உயர்வு பெற்றிருந்தார்கள். இலக்கியம், தத்துவம் சார்ந்த போட்டிகள் உரை-யாடல்களில் பெண்கள் ஆண்களுடன் போட்டியிட்டார்கள். இங்கே பாலின வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. 'விஸ்வவரா' என்ற பெண் தத்துவ ஞானி அக்காலத்தில் புகழ்பெற்ற தத்துவ ஞானி ஆவார். இவர் ரிக் வேதத்தின் பாடல்கள் இயற்றியுள்ளார். ரிக் வேதத்தில் இவரது பாடல் இடம் பெற்றுள்ளதன் மூலம் வேதகாலத்தில் பெண்கள் பெற்றிருந்த சிறப்பை அறியலாம்.

வேதகாலத்தில் உயர்வாகப் போற்றப்பட்ட மற்றொருவர் 'லோபமுத்ரா' ஆவார். இவர் பெரும் சிறப்பு மிக்க புலவர் ஆவார். இவரது பாடல்களும் வேதப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அக்காலப் பெண்கள் புலமையில் மட்டுமல்லாமல் இசை, நடனம், சமுதாயச் சிந்தனை ஆகியவற்றிலும் உயர்வு பெற்றவர்களாக இருந்தார்கள். இத்தனை திறமைபெற்றவர்களாகப் பெண்கள் இருந்த போதும் பல சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கும் அவர்கள் ஆட்பட்டார்கள். இந்த சமுதாயக் கட்டுப்பாடுகள் பெண்களை அடிமைப்படுத்தியிருந்தது எனக் கூறலாம்.

வேதகாலத்தில் பெண்கள் சமுதாய உரிமைகளை ஏராளமாகப் பெற்றிருந்தார்கள். அதே வேளையில் மற்றொரு புறம் அவர்கள் ஆண்களின் உடமைப் பொருளாகவும் கருதப்பட்டார்கள். இதனால் அவர்கள் ஆண்களின்

கட்டுப்பாட்டிற்குள்ளாகவே வாழும் நிலை இருந்துள்ளது. பிற ஆடவர்களின் பார்வையில் இருந்து பெண் மறைக்கப்பட்டாள். வெளியில் செல்லும் போது "பெண்கள் முகமூடி அணியும் பழக்கம் இருந்தது"[29] என்பதன் மூலம் பெண்களின் நிலையை அறியலாம். மேலும் இக்காலத்தில் சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இவை பெண் சமூகம் அடிமைப் படுத்தப்பட்டிருந்ததை வெளிப்படுத்தும் சான்றுகள் ஆகும்.

வேதகாலத்துப் பெண்களின் நிலையே இதிகாச காலங்களிலும் இருந்துள்ளது. அக்காலத்தில் பெண்கள் வீட்டு உடமையாக்கப்பட்டார்கள். வீட்டின் அனைத்து வேலைகளையும் செய்வதற்குப் பெண்கள் தான் பொறுப்பானார்கள். பொருளாதார நிலையில் பெண் ஒடுக்கப்பட்டாள். ஆணாதிக்கச் சமுதாயம் இதிகாச காலத்தில் மேலும் அழுத்தம் பெற்றது. பெண்கள் சிந்தனையற்றவர்கள், அவர்களிடம் ஆலோசனை கேட்பது தவறு என்ற கருத்து வளர்ச்சி பெற்றது. இதுபோல் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான நிலை இருந்தாலும் 'கணவனின் பாதியை மனைவியே முழுமை செய்கின்றாள்' என்ற கருத்தும் நிலைபெற்றிருந்ததை அறியும் போது பெண்கள் அவர்களின் உரிமைகளைத் தொடர்ந்து பெற்றுவந்தார்கள் எனலாம்.

வேதகாலத்தில் பெண்விடுதலை, பெண்ணியம் போன்ற கருத்துகள் இருக்கவில்லை. ஆனால் பெண்கள் அடிமைகளாகவோ, உரிமையற்றவர்களாகவோ இருக்கவில்லை. பெண்களுக்கான கட்டுப்பாடுகள் சமுதாயம் முழுமையும் பரவி இருந்ததாக அறியமுடியவில்லை. ஒருபுறம் பெண்படைப்பாளர்கள், பெண் சாதனையாளர்கள் இருந்துள்ளார்கள் மறுபுறம் கட்டுப்பாடுகளும் இருந்துள்ளன. எனவே, இந்தக் கட்டுப்பாடுகள் ஒட்டு மொத்தப் பெண்ணினத்தின் மீதானதாகக் கருத இயலாது. எனவே வேதகாலப் பெண்கள் உரிமை பெற்றவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

கட்டுப்பாடுகள் இருந்த அந்தச் சமுதாயத்தில் படைப்பாளர்களாகவும், உரிமை பெற்றவர்களாகவும், கல்வி வேள்விகளில் சிறப்புற்றவர்களாகவும் விளங்கிய பெண்கள் வேதகாலப் பெண்ணியலாளர்கள் எனக்

கருதலாம். அவர்கள் சமூகக் கட்டுப்பாட்டை எதிர்த்த பெண்-விடுதலையாளர்கள் என்றும் கூறலாம். எனவே வேதகாலப் பெண்ணியம் என்பதும் பெண் விடுதலை என்பதும் அக்காலப் பெண்களிடம் இயல்பாகவே இருந்துள்ளன என்பதை இதன் மூலம் பெறமுடிகின்றது.

## 2.6.2 சங்ககாலப் பெண்ணியம்

சங்ககாலம் தமிழகத்தின் பொற்காலம் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் பதிவுகள் ஆகும். அக்காலத்தில் மக்கள் அனைவரும் அனைத்துச் செல்வங்களும் பெற்றிருந்தனர். இதனால் மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள் என்பதையும் அறிய முடிகின்றது. இந்தச் சங்க காலம் என்பது கி.பி.250 வரை என்று ஆய்வாளர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் பெண்கள் சுயமாகச் செயல்படும் உரிமை பெற்றிருந்தார்கள். ஆண்களுடன் பெண்கள் பொது இடங்களில் சேர்ந்து மகிழ்ச்சியாக ஆடல், பாடல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை அறிய-முடிகின்றது. அக்காலப் பெண்களிடம் ஆண்கள் உயர்வான மதிப்பும் கொண்டிருந்தனர். இதை "இந்து சமயத்தின் பெண் தெய்வங்கள் தமிழ்க் கலாச்சாரத்துடன் கூடிய ஆடையுடன் இருப்பதன் மூலம் அறியலாம்".[30] சங்க காலத்தில் பல பெண்பாற் புலவர்கள் பெரும் புகழுடன் வாழ்ந்திருக்கிறார்கள். ஆத்திசூடி பாடிய ஔவையாரை ஓர் உதாரணமாகக் காட்டலாம்.

தமிழகத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியச் சமயங்களான வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் நிலைபெற்றன. இந்தச் சமயங்கள் பெண்களுக்குச் சமயரீதியான உரிமைகளை வழங்கி இருந்தன. பாலின வேறுபாடுகள் இல்லாமல் சமயப்பணியாற்றவும், சமயச் சடங்குகளில் ஈடுபடவும் உரிமைகளை வழங்கியிருந்தன. பெண்கள் துறவிகளாக இருப்பதற்கும் இச்சமயங்கள் இடம் அளித்தன. சமணமும், பௌத்தமும் ஏராளமான சீடர்களைக் கொண்டிருந்தன.

சமண, பௌத்த பெண் சீடர்கள் சமய விவாதங்களில் ஈடுபட்டனர். கல்வி, தத்துவ ஞானம் போன்றவற்றில் சிறந்த புலமை பெற்றிருந்தனர் இலக்கியங்களைப் படைப்பதிலும் திறமை பெற்றிருந்தார்கள் என்பதை சமய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன.

பெண் சமுதாயத்திற்கு சங்ககாலம் ஒரு சிறப்பான காலமாக அமைந்ததை காணமுடிகின்றது. ஆனால் இந்த நிலை தொடரவில்லை. கடைச்சங்ககாலத்தின் இறுதிக்காலம் தொடங்கி, தொடர்ந்து பெண்களின் நிலை தாழ்வடையத் தொடங்கியது எனலாம். சமுதாயம் ஆணாதிக்கம் மிக்கதாக மாறியது. பெண்கள் சமய ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அடிமைப்படுத்தப்பட்டார்கள்.

சங்க காலத்தில் போர்களில் ஈடுபட்ட பெண், பின்னாளில் வீட்டுக்குள் அடைக்கப்பட்டாள். பெண்களுக்குப் பெண்மை கற்பிக்கப்பட்டது. ஆண்கள் பல தனி உரிமைகளைப் பெற்றார்கள். பலதாரமணம், பரத்தமை போன்றவை ஆண்களுக்கு உரிமையாக்கப்பட்டன. பெண், கணவனுக்குக் கட்டுப்பட்டவள்; கணவனின் உடமைப் பொருள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

பெண்கள் பண்பாட்டு ரீதியாக ஒடுக்கப்பட்டாலும் கல்வி, வேள்வி, சமயச்சடங்குகளில் பெண்கள் ஈடுபட்டிருந்ததும், இலக்கியங்களில் படைப்பாளர்களாகத் திகழ்ந்ததும் பெண்விடுதலையாகவும் பெண்ணியப் பண்பாகவும் கொள்ளலாம்.

### 2.6.3 இலக்கியங்களில் பெண்ணியம்

பெண்கள் ஆணாதிக்கச் சமூகத்தால் பண்பாட்டு கலாச்சார அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள். இதனால் பெண்கள் அவர்களுக்கான உரிமைகளை இழந்தார்கள். அவர்களது பெற்றோர்களுக்காகவும், திருமணத்திற்குப் பின்னர் கணவனுக்காகவும் மற்றும் குழந்தைகளுக்காவும் வாழத் தொடங்கினார்கள். பெண்களின் உலகம் சிறு வட்டத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. இதை இலக்கியங்கள் விளக்குகின்றன.

பெண் ஒடுக்கப்பட்டதை எடுத்துரைக்கும் இலக்கியங்கள் பெண் விடுதலைக்கும், பெண்களின் உரிமைகளுக்கும் குரல் கொடுத்துள்ளன. இலக்கியங்களில் பெண்ணியம் என்ற இப்பகுதியில் உலகநீதி இலக்கியம் எனப் போற்றப்படும் திருக்குறள் மற்றும் சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ள பெண்ணியக் கருத்துகள் இங்கு சான்றிற்காக விளக்கப்பட்டுள்ளன.

### 2.6.3.1 திருக்குறள்

உலகப்பொதுமறை எனப்போற்றப்படும் நூல் திருக்குறள் ஆகும். இது சமுதாயம் குறித்த அறக்கருத்துக்களை ஏராளமாகக் கொண்டுள்ளது. இதில் பெண்கள் பற்றிய உயர்வான கருத்துகளைக் கூறியிருப்பதைக் காணலாம். திருக்குறள் வாழ்க்கைத்துணை நலம், பிறனில் விழையாமை, வரைவின் மகளிர், பெண்வழிச் சேரல் ஆகிய அதிகாரங்களில் பெண்களைப் பற்றிப் பேசுகின்றது. "திருவள்ளுவர் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒத்த உரிமை நல்கும் சான்றோர்"[31] எனப் போற்றப்படுகின்றார். இதன் மூலம் திருவள்ளுவர் பெண்களுக்கான உரிமைகளை வலியுறுத்தியுள்ளது புலனாகிறது.

"*பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின்*". (குறள்.54)

என்ற குறள் இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப்பெற்ற பெண்ணைவிட பெருமை உடையது வேறு எதுவும் இல்லை எனக் கூறுகின்றது இங்கு கற்பு எனப்படுவது எத்தனை துன்பம் நேர்ந்தாலும் பழுதுபடாத மன உறுதியைக் குறிக்கின்றது.

"*சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை*". (குறள்.57)

என்ற இக்குறள் மகளிரைச் சிறையில் வைத்துக் காக்கும் முறையால் எந்தப் பயனும் இருக்காது. அவர்கள் மனதால் தங்களைக் காத்துக் கொள்வதே

சிறந்த காவலாகும் எனக் கூறுகின்றது. "பெண்களைக் கட்டுப்படுத்தி அடக்கி வைக்க முடியாது எனபதையும் இக்குறள் எடுத்துக்காட்டுகின்றது"[32] இதன் மூலம் பெண்களை அடக்கி ஆள்வதாகப் பெருமை கொள்ளும் ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்துள்ளார் வள்ளுவர்.

கல்வி, கற்பு ஆகிய சமுதாய அறக்கோட்பாடுகளை ஆண்-பெண் இருபாலருக்கும் பொதுவாக வைக்கின்றது திருக்குறள். "பெண்வழிச் செல்ல விரும்பும் ஆடவர்க்கு வள்ளுவர் கண்டிப்பான எச்சரிக்கை விடுத்துள்ளார்",[33] "பலதார மணம் கண்டிக்கப் பெற்றதன் அல்லது மறுக்கப்பட்டதின் துணை விளைவே பிறனில் விழையாமை"[34] என்று திருக்குறளின் பெண்ணியம் குறித்த கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன.

### 2.6.3.2 சிலப்பதிகாரம்

தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பெற்றுள்ள இலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. சிலப்பதிகாரம் பெண்ணை மையமாக வைத்து இயற்றப்பட்டது. இது ஒரு பெண்ணிய எழுச்சிக் காப்பியம் என்று போற்றப்படும் தன்மை கொண்டதாகும்.

சங்க காலம் தொடங்கி இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் முதன்மையாகக் கொண்டு வெளிவந்தன. "மனிதப் பண்புகளில் காதலும் வீரமும் மட்டுமே தலையானவை என்று போற்றப்பட்டுக் கொண்டிருந்த அன்றையச் சமுதாயத்தில் பெண்ணின் வீரத்தையும் போராட்ட குணத்தையும் வெளிப்படுத்தியது சிலப்பதிகாரம்".[35]

சமூகப் பண்பாட்டு அடக்கு முறையினால் பெண்கள், அவர்கள் மீது ஏவப்பட்ட அடக்கு முறைகளையும் கொடுமைகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டிருந்தனர். அவ்வாறு ஏற்றுக்கொள்வதுதான் பெண்மையின் சிறப்பு என்று புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. அநதப் புறநானூற்றுப்-பாடல்கள் பெண்பால் புலவர்களால் இயற்றப்-பட்டுள்ளன என்பதும் இதன் சிறப்பம்சம் ஆகும். பெண்களைக் கொண்டே பெண்ணிய அடக்குமுறையை

மேற்கொண்டது ஆணாதிக்கச் சமுதாயம் என்பதை புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. அக்காலப் பெண்கள் சிறு சிறு செயல்களின் மூலம் தன்னிறைவு பெற்றுக் கொண்டவர்களாக இருந்தனர்.

பெண்களுக்குக் கட்டுப்பாடுகளைக் கற்பிக்கும் காலத்தில் தோன்றியது சிலப்பதிகாரம். ஆனால், இதன் தலைவி பெண்களுக்கான கட்டுப்பாடுகளை உடைத்தெறிகின்றாள். கணவன், அரசனால் தண்டிக்கப்பட்டான்; கொல்லப்பட்டான் என்றதும் அக்காலப் பெண் கணவனோடு உடன் கட்டை ஏறவேண்டும் அல்லது கைம்மை மேற்கொள்ளவேண்டும். அவள் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்பன அக்காலப் பெண்களுக்கான மரபுகள் ஆகும்.

ஆனால் சிலப்பதிகாரத்தலைவி இந்தச் சமூக மரபுகள் எதையும் கடைப்பிடிக்கவில்லை. கணவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டவுடன் கணவன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை விளக்கி அவன் நிரபராதி என்பதை நிலைநாட்ட முயற்சிக்கின்றாள். அவள் உள்ளம் கொதிக்க எழுகின்றாள். நேரடியாக மன்னனைக் காண வருகின்றாள். அரண்மனையில் காவலன் மறித்தபோது அதையெல்லாம் புறம் தள்ளி உள்ளே செல்கின்றாள். மன்னனிடம் தன் கணவன் குற்றமற்றவன் என நிறுவுகின்றாள். தவறுதலாகத் தண்டனை வழங்கிய மன்னனும் அவனது மனைவியும் மரணமடைந்த பின்னரும் அவளது கோபம் அடங்கவில்லை, மதுரையைத் தீயிட்டு எரிக்கின்றாள். அதன் பின்னர் அவள் கணவனோடு வீடுபேறு அடைகின்றாள் என்கிறது சிலப்பதிகாரம்.

சமுதாயத்தின் அடக்குமுறையால் அடக்கப்படும் பெண் எத்தனை எழுச்சிகொண்டு எழுகின்றாள் என்பதைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. ஒரு பெண் நினைத்தால் எந்த அளவுக்கு ஆற்றலுடன் எழமுடியும் என்பதைக் காட்டுவதுடன், அவளைப் படைகளோ, நாட்டின் அரசனோ, சமூகக் கட்டுப்பாடுகளோ கட்டுப்படுத்தமுடியாது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

பெண்களுக்கு எதிரான சமய, சமூகக் கட்டுப்பாடுகள் அழுத்தமாக உயர்வு பெற்றிருந்த காலக்கட்டத்தில் தோன்றிய சிலப்பதிகாரம் அவற்றை முழுமையாக எதிர்க்கின்றது. பெண்களுக்குச் சமூகம் நிர்ணயித்திருந்த பெண்மை, அடக்கம், கைம்மை போன்ற பண்புகளை எல்லாம் எதிர்த்து உருவான காப்பியமே சிலப்பதிகாரம் எனக் கருதலாம்.

இரண்டாம் நூற்றாண்டில் ஒரு ஆண் மகனால் கூட அரசனை எதிர்க்கமுடியாது. அந்தக் காலச்சூழலில் ஒரு பெண் தனியாக எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றாள் என்று காட்டும் சிலப்பதிகாரம் ஒரு பெண்ணியக்காப்பியம் என்பது தெளிவாகும்.

### 2.6.3.3 பெரியபுராணம்

பெரியபுராணம், பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி இலக்கியம் ஆகும். இது சேக்கிழாரால் இயற்றப்பட்டுள்ளது. இக்காப்பியம் பக்திக் காப்பியம் என்றாலும் சமூக நோக்குடையது. பெரியபுராணம் தோன்றிய காலம் ஆணாதிக்கச் சமுதாயம் ஆகும். “அக்காலச் சமுதாயத்தில் பெண்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினையும் ஆண்களுக்கு அடிமையாக இல்லாமல் சுயமாக உரிமையோடு செயல்பட்ட நிலைகளையும் எடுத்துக் காட்டுகின்றது பெரியபுராணம்”.[36]

பெண்கள் தாழ்நிலையில் வைக்கப்பட்ட அக்காலத்தில் சேக்கிழார் பெண்களுக்கு மதிப்பளிக்கின்றார். சிவனடியார்களாக காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோர்களை ஆண் அடியார்களுடன் சமமாக வைத்துப் போற்றுகின்றார்.

பெண்களுக்கான பிரச்சினைகள் எப்போது எந்த வடிவில் வேண்டுமானாலும் ஏற்படும். ஆனால் அவற்றில் இருந்து பெண்கள் விலகி ஓடிவிடக்கூடாது; அவற்றை எதிர்த்துப் போராடவேண்டும் என்று மனவலிமையை ஏற்படுத்துகின்றது பெரியபுராணத்தின் காரைக்கால் அம்மையார் புராணம்.

காரைக்கால் அம்மையார், புனிதவதியார் என்ற இயற்பெயருடன் தன் கணவனுடன் இயல்பான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார். ஒரு நாள் தனது கணவன் வீட்டில் இல்லாத நேரத்தில் சிவனடியார் ஒருவருக்கு விருந்தோம்பல் செய்கின்றார். இதனால் பிரச்சினை ஏற்படுகின்றது. தற்செயலாக வெளிப்பட்டுவிட்ட தனித்தன்மையைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கணவன் விட்டுவிலகிச் சென்று விடுகின்றான்.

கணவனைத் தேடிச் சென்று தனக்கான வாழ்க்கையை கேட்கின்றார். ஆனால் கணவன் அவரைத் தெய்வமாகக் கூறி புறக்கணித்து-விடுகின்றான். இதனால் அவர் வாழாவெட்டி என்ற முத்திரையோடு ஒதுங்கி விடவில்லை துணிச்சலுடன் தனியாக வாழ முடிவெடுக்கின்றார். ஆனால் இந்தச் சமுதாயத்தின் கொடூரத்தில் இருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என் எண்ணுகின்றார். இதனால் தனது அழகிய உடலை பேய்வடிவமாக மாற்றுகின்றார். இதை,

*“ஈங்கிவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக் காகத்*
*தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழத்திங் குன்பால்*
*ஆங்குதின் தாள்கள் போற்றும் பேய்வடி(வு) அடியே னுக்குப்*
*பாங்குற வேண்டும் என்று பரமன்தாள் பரவி நின்றார்”*[37]

(பெ.பு.கா.அ.பு., பா.49)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

கணவனை நீங்கிய பெண்கள் கைம்மை நோன்பு ஏற்று, சமூகக் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு வீட்டுக்குள் அடங்கி இருக்கவேண்டும் என்ற நிலையை மீறுகின்றார் காரைக்கால் அம்மையார். சமயப் பணியை மேற்கொண்டு சமூகத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு வாழ்கின்றார். இது அக்காலத்தின் பெண்ணியமாக பெண் விடுதலையாக வெளிப்படுகிறது எனலாம்.

பெரியபுராணத்தில் இடம் பெற்றிருப்பவர் சங்கிலியார் ஆவார். இவர் தனது பெற்றோருடன் வாழும்போது மணம் பேசிமுடிக்க பெற்றோர்கள் எண்ணுகின்றனர். இதனால் தகுந்த மணமகன் ஒருவரின் பெற்றோருடன் மகள் சங்கிலியாரை மணம் பேசி முடிக்கின்றனர். ஆனால் இதை அறிந்த சங்கிலியார் பெற்றோரின் கருத்திற்கு உடன்பட மறுக்கின்றார். அத்துடன் அவரது திருமணம் அவர் விரும்புவது போலவே நடைபெற வேண்டும் எனக் கூறியதுடன், தனது திருமணத்தில் பெற்றோர் தலையிடவேண்டாம் என்றும் தடை விதிக்கின்றார். சங்கிலியாரின் இச்செயல் பெண்ணியக் குரல் ஆகும். திருமணம் குறித்து பெண்கள் சுயமாக முடிவெடுக்கும் உரிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதைப் பெரியபுராணம் வலியுறுத்து-கின்றது.

பெரியபுராணம் பெண்களுக்கான உரிமைகளையும், பெண்-விடுதலையையும் பதிவு செய்துள்ளது. இது போல் தமிழ் இலக்கியங்கள் பெண்ணியக் கருத்துகளை ஏராளமான இடங்களில் பதிவு செய்துள்ளன. ஆனால் அவற்றை ஆணாதிக்கச் சமுதாயம் ஓங்கி ஒலிக்கச் செய்யாமல் கட்டுப்படுத்தியே வந்துள்ளது என்பதும் காலம் உணர்த்தும் உண்மையாகும்.

### 2.6.4 இந்தியாவில் மேலைநாட்டுப் பெண்ணியத்தின் தாக்கம்

உலகம் எங்கும் பெண்விடுதலைச் சிந்தனைகள் எழுச்சி பெற்ற காலம் பதினெட்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். மேலை நாடுகளில் வளர்ச்சி பெற்ற பெண் விடுதலை இயக்கங்கள், இந்தியாவிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்தியப் பெண்கள் சமயக் கட்டுப்பாடுகளாலும் பண்பாட்டுச் சட்டங்களாலும் அடக்கத்துடன் இருந்தார்கள். பெண்மையின் பண்பு அடக்கத்துடன் இருப்பதுதான் என்று கருதினர். இதனால் பெண் விடுதலை, பெண்ணியம் போன்ற கருத்துகள் அவர்களிடம் சென்று சேராமலே இருந்தது.

இந்தியாவின் பெண்ணியக் கருத்துகள் முழுமையாக மேலைநாட்டுத் தொடர்பால் ஏற்பட்டவை ஆகும். மேலை நாட்டில்

பெண்ணியம் என்பது கல்வி, வேலை வாய்ப்பு, சமூக அங்கீகாரத்தில் சமத்துவம் என்பதன் அடிப்படையில் அமைந்திருந்தது. அரசியல் பங்கேற்பும் பெண்ணியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் மூலம் பெண்கள் அரசியலில் ஒரு சக்தியாக விளங்கினார்கள். அரசியல் சட்டங்களை மாற்றி அமைத்தார்கள்; அரசியல் அதிகாரமும் பெற்றார்கள். ஆனால் இந்தியப் பெண்ணியம் தனித்து வளரவில்லை. அது "இந்திய வரலாற்றோடு குறிப்பாக விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் தொடர்புடையது"[38] விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்தது போல், பெண்விடுதலை இயக்கமும் படிப்படியாக பெரும் வளர்ச்சி பெற்றது.

இந்தியப் பெண்ணியச் சிந்தனைக்கு அடித்தளமாக அமைந்தது பெண் கல்வியாகும். ஆங்கிலேயர்களால் அடிமைப்படுத்தப்பட்ட இந்தியா பல சிறப்புக்களையும் பெற்றது. ஆங்கிலேயர்கள் பாலினப் பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் கல்வியை வழங்கினார்கள். ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது அவர்கள் மதப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டார்கள். இதனால் மதபோதகர்கள் அடித்தட்டு மக்களிடமும் கல்வியைக் கொண்டு சென்றார்கள். இந்திய இளைஞர்கள் இங்கிலாந்து சென்றும் கல்வி கற்றார்கள்.

இங்கிலாந்து சென்று கல்வி கற்று வந்த அறிஞர்கள் அந்நாட்டு சமுதாயச் சீர்திருத்தங்களை அறிந்தார்கள். இதனால் இந்திய நாட்டின் பெண்களும் முன்னேறவேண்டும் என்ற பெண்ணியக் கருத்துகளை விதைத்தார்கள். இந்தியப் பெண்ணியம் ஆண்களால் விதைக்கப்பட்டது என்பதும் உண்மையாகும்.

நவீன இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் இராஜாராம் மோகன்ராய் இந்தியப் பெண்ணியத்தின் தந்தை என்றும் போற்றப்படுகின்றார். இவரது முயற்சியால் இந்தியப் பெண்சமுதாயம் ஏராளமான பயன்களைப் பெற்றது. சதி என்னும் உடன்கட்டை ஏறும் முறையை ஒழித்தார். விதவைத் திருமணம், பெண்கல்வி, குழந்தைத் திருமணம், சதி, பெண்கள் சொத்துரிமை குறித்த சட்டங்களைக் கொண்டு வந்தார். சமூக

மாற்றத்தையும் இராஜாராம் மோகன்ராய் ஏற்படுத்தினார். இவர் ஏற்படுத்திய பிரம்மசமாஜம் என்ற அமைப்பு தொடர்ந்து பெண் விடுதலைக்கான பணியில் ஈடுபட்டுவந்தது.

இராஜாராம் மோகன்ராய் மேற்கொண்ட பெண் சமுதாய சீர்திருத்தங்களுக்கு வித்யாசாகர், ரானடே போன்றோரின் கருத்துகள் தொடர்ந்து வலுவூட்டுவதாக இருந்தன.

மேலைநாட்டு ஆதரவாளர்களாலும் இந்தியச் சிந்தனை-யாளர்களாலும் கல்வியாளர்களாலும் இந்தியப் பெண்ணியம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தது. 1917-ல் 'இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு' என்ற பெண்கள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பிற்கு அன்னிபெசன்ட் அம்மையார் முதல்தலைவராகப் பொறுப்பேற்றார். இந்த அமைப்பு பெண்களுக்கான கல்வியை முதன்மையாக வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து அரசியலிலும் கவனம் செலுத்தியது. சரோஜினி நாயுடு தலைமையில் பெண்களுக்கு ஓட்டுரிமைக்காகப் போராடத் தொடங்கியது. மனம் தளராத தொடர் போராட்டத்தின் காரணமாக 1935-ல் பெண்கள் ஓட்டுரிமையைப் பெற்றார்கள்.

இந்தியப் பெண்கள் அமைப்பு பெற்ற வெற்றி, இந்தியப் பெண்கள் வாழ்வில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்திய அளவில் ஆங்காங்கே சிறு சிறு அமைப்புகளாக இயங்கி வந்த பெண்கள் அமைப்பு, இந்தியப் பெண்கள் அமைப்புடன் இணைந்து கொண்டன. இதனால் இந்த அமைப்பின் எல்லை விரிவடைந்தது.

இந்தியப் பெண்கள் அமைப்பு இந்திய அளவோடு நின்று விடவில்லை. உலகப் பெண்ணிய அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. இந்திய பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் "1923-ல் ரோம் நகரில் நடந்த சர்வதேசப் பெண்கள் ஓட்டுரிமை ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் (Congress of International Women Suffrage Allience) கலந்து கொண்டனர்".[39] இதனால் மேலை நாட்டுப் பெண்ணியக் கருத்துகள் இந்தியாவிற்கு வந்தன.

அது போல் இந்தியப் பெண்ணியக் கருத்துகளும் உலக அரங்கில் பதிவுசெய்யப்பட்டன.

இந்தியப் பெண்விடுதலைப் போராட்டமானது தனித்து இயங்க-வில்லை. அது விடுதலைப் போராட்டத்திலும் தன்னை இணைத்துக்-கொண்டது. இதனால் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் ஆதரவும் ஏராளமாகக் கிடைத்தது.

இந்தியப் பெண்ணியத்தில் முழுமையாக மேலை நாட்டின் தாக்கம் இருந்தது. இதன் வளர்ச்சியில் ஏராளமான மேலை நாட்டு அறிஞர்கள் அவர்களின் உழைப்பை வழங்கி உள்ளார்கள். அறிஞர்களின் துணையோடு வளர்ந்த இந்தியப் பெண்ணியம் வளர்ச்சிக்குப் பின்னர் தனித்துச் செயல்படத் தொடங்கியது. இந்தியப் பெண்ணியத்தின் கருத்துகள் மேலை நாடுகளுக்குச் செல்லும் வண்ணம், இந்தியப் பெண்ணியலாளர்கள் செயல்பட்டார்கள் என்பதை வரலாறுகள் மூலம் அறியலாம்.

## 2.7 இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் கட்டுப்பாடுகளை உடைத்து முழுமையாக வெளிவரத்துடிக்கும் வேகத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சங்க காலம் முதற்கொண்டு இருபதாம் நூற்றாண்டுவரை பெண்ணியம் பல்வேறான தளங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. அதன் பயனாக, ஏராளமான உரிமைகளைப் பெண்கள் பெற்றுள்ளார்கள்; விடுதலை உணர்வையும் பெற்றுள்ளார்கள். ஆனாலும் முழுமையான விடுதலையைப் பெற வேண்டும் என்பதைப் பெண்ணிய இயக்கங்கள் வலியுறுத்துகின்றன.

இன்றையச் சமூகச் சூழல் பொருளாதார அடிப்படைப் படையிலானதாக உள்ளது. எனவே ஆண்-பெண் இருபாலரும் பொருளீட்டாளர்களாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆண் சமுதாயமே பெண்ணின் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையைப் பெண்ணியம் சாதகமாகப்

பயன்படுத்திக் கொண்டுள்ளது. பொருளாதார நிலையில் பெண் உரிமை பெற்றவளானாள். மேலும் பல உரிமைகள் அவளைத் தேடி, தானே வந்துசேர்கின்றன. இது இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டுப் பெண்ணியத்திற்குக் காலம் ஏற்படுத்திக் கொடுத்த ஒரு வாய்ப்பாகக் கருதலாம். இதன் பயணமாகவும் இன்றையப் பெண்ணியம், ஆணாதிக்கச் சமுதாயத்திடம் இருந்து ஓரளவு விடுதலை பெற்றுள்ளது என்றே கூறலாம்.

இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் பெரும் எழுச்சி பெற்று வளர்ந்துள்ளது. இது சமுதாயத்தின் அனைத்துத் தளங்களிலும், எல்லா நிலைகளிலும் விடுதலைபெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அரசியல் அதிகாரம் பெறுவதும் அதன் அடிப்படைக் கருத்தாக விளங்குகின்றது. அதன் ஒரு பகுதியாக, பாராளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறுவதில் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் முழுமையான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இன்றையப் பெண்ணியம் அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் மட்டுமல்லது பாலுறவிலும் ஒரு குறிப்பிட்ட விடுதலையை முன்வைக்கின்றது. இருபத்தியோராம் நூற்றாண்டில் பெண்ணியம் கண்டுள்ள வளர்ச்சிக்கு வித்திட்டதிற்குக் காரணம் இருபதாம் நூற்றாண்டின் பெண்ணியலாளர்கள் ஆவர். எனவே, இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் என்ற இப்பகுதி

1. விடுதலைப் போராட்டக்காலப் பெண்ணியம்
2. விடுதலைக்குப்பின் பெண்ணியம்
3. இருபத்தோராம் நூற்றாண்டுக்காலப் பெண்ணியம்

என்ற மூன்று உட்தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

### 2.7.1 விடுதலைப் போராட்டக்காலப் பெண்ணியம்

இந்திய வரலாற்றில் சமுதாயம் குறித்து எதுபற்றிப் பேசினாலும், அதை இந்திய விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புபடுத்திப்பார்ப்பது

அவசியமாகின்றது. விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் ஈடுபட்டனர். அக்காலக்கட்டத்தில் சர்வதேச அளவிலான தொடர்புகள் இந்தியாவிற்குக் கிடைத்தது. 1878ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்து பிளாவாட்ஸ்கி அம்மையார், கர்னல் ஆல்கட் ஆகிய இருவரும் இந்தியாவிற்கு வந்து சென்னையில் தங்கினர். அவர்கள் சென்னையில் ஏற்படுத்திய இயக்கமே பிரம்ம ஞான சபை ஆகும். "தென்னிந்தியாவில் சமய, சமுதாயச் சீர்திருத்தங்கள் தோன்றிட அவ்வியக்கம் அரும்பாடுபட்டது"[40] மூடநம்பிக்கைகளை அகற்றும் பணியை இவ்வியக்கம் மேற்கொண்டது. அப்போராட்டங்கள் பெண் விடுதலை குறித்த பெண்ணியப் போராட்டங்களாகவும் வளர்ச்சி பெற்றன.

பெண்குழந்தைகள் பிறப்பது குடும்பத்தின் பாவம் என்ற நிலை நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. இதனை,

*"மங்கையா பொறக்காம கண்ணே நீ*
*மைந்தனா பொறந்திருந்தா எனக்கு*
*மன்னவன் கிட்டே துன்பமில்லை"*

என்ற நாட்டுப்புறப்பாடல் காட்டுகிறது. இதுபோல்

*'அஞ்சாறு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்'*

என்ற பழமொழியும் பெண்குழந்தைகள் பிறப்பதை வெறுத்து ஒதுக்கிய நிலையை எடுத்துரைக்கின்றன. இவற்றை விடுதலைப் போராட்ட காலத்தில் தோன்றிய பெண்ணிய இயக்கங்கள் மாற்றி அமைத்தன. அன்னிபெசன்ட் அம்மையார், இராசாராம்மோகன்ராய், நிவேதிதாதேவி ஆகியோர் பெண்ணிய இயக்கங்களை நடத்தி, சமூகச் சீர்திருத்தங்களை மேற்-கொண்டனர்.

தமிழ்நாட்டில் பாரதியார் பெண்ணியத்திற்குக் குரல் கொடுத்தவர்-களில் முதன்மையான இடத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர் ஆவார். இவர் மகாபாரதக் கதையை அதன் நாயகியான திரௌபதைக்கு

முதன்மை இடம் கொடுத்துப் பாடுகின்றார். அந்த நூலுக்கு 'பாஞ்சாலி சபதம்' என்று பெயர் வைத்துப் பெண்ணுக்கு மதிப்பளிக்கின்றார். அதில் பாஞ்சாலியை பெண்களின் புரட்சிக் குரலாக முழங்கவைக்கின்றார். கணவனான தருமன் பந்தயத்திலே 'தன்னை இழந்தபின் என்னைப் பந்தயப் பொருளாக வைக்க உரிமையில்லை' என்று உரிமைக்குரல் எழுப்புகின்றார். இதனைப் பெண் சமுதாயத்திற்கான ஒட்டு மொத்தக் குரலாகவே பாரதியார் பதிவுசெய்கின்றார்.

நாட்டின் விடுதலைக்காக பாரதியார் ஏராளமான கட்டுரைகளையும் கவிதைகளையும் படைத்துள்ளார். அவரது கட்டுரைகள் ஆண்கள் பெண்கள் இருவரும் விடுதலைப் போரில் ஈடுபடவேண்டும் என்பதை "பாரதநாடு இப்போது அடைந்திருக்கும் இழிவு நிலைமையிலிருந்து உன்னதம் பெறவேண்டுமானால் ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் தேசபக்தியில் சிறந்தவர்களாக வேண்டும்"[41] என்று கூறுவதன் மூலம் வலியுறுத்துகின்றார்.

உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் நூல் திருக்குறள்; அதுபோல் ஔவையின் நூல்களைப் போற்றுகின்றார் "திருள்ளுவரைக் காட்டிலும் சிறப்புடையவராக ஔவைப் பிராட்டியை இவர் போற்றுகின்றார்"[42] பெண்களைத் தாயாகப் போற்றுகின்றார் பாரதியார். சங்கப் பாடல்களில் இடம்பெற்ற போர்க்காட்சியையும் அப்போரிலே கணவனையும் மகனையும் போருக்கு அனுப்பிய தாயைப் போற்றிப் பாடுகின்றனர். தாயே சமுதாயத்தின் பொறுப்புள்ள சந்ததியினரை உருவாக்கமுடியும் என நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார்.

பெண்களுக்கான அடக்குமுறை குடும்பத்தில் இருந்தே தொடங்குகின்றது. எனவே பெண்கள் குடும்பத்தில் ஏற்படும் அடக்குமுறையை எதிர்த்து சாத்வீகமாகப் போராட வேண்டும். எனவே பெண்கள் தனது கணவனிடம் "நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதம் உண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லா விட்டால் இன்று இராத்திரி சமையல் செய்யமாட்டேன் எனக்கு வேண்டியதை மட்டும்

தயார் செய்து தின்று கொண்டிருப்பேன். உனக்குச் சோறுபோடமாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் ரஸ்தாவில் கிடந்துசாவேன். இந்த வீடு என்னுடையது இதை விட்டு வெளியேறவும்மாட்டேன்"[43] என்று பெண்களுக்கான போராட்ட வழிகளையும் எடுத்துரைக்கின்றார். மேலும் பெண்கள் கல்விகற்க வேண்டும், குழந்தைத் திருமணம் தடை செய்யப்படவேண்டும். திருமண விவாகரத்து உரிமையைப் பெண்களுக்கு வழங்க வேண்டும். திருமணத்திற்குப் பெண்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது; அவர்கள் விரும்பினால் தனியாக வாழ அனுமதிக்க வேண்டும், அரசுப் பணியில் அவர்களுக்கு இடம் அளிக்க வேண்டும் என பெண்களுக்கான உரிமைகளைப் பட்டியலிட்டுத் தீர்மானங்களாகப் பதிவுசெய்கின்றனர்.

பாரதியார் விடுதலைப் போராட்டக் கவிஞர். இவர் நாட்டு-விடுதலைக்காகப் பாடிய கவிதைகளும், எழுதிய கட்டுரைகளும் விடுதலைப் போராட்டத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அதுபோல் விடுதலைப் போராட்ட படைப்புகளுக்கு இணையாகப் பெண்விடுதலைக் கருத்துகளை வலியுறுத்தும் கவிதைகளையும், கட்டுரைகளையும் படைத்துள்ளார். எனவே தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம் குறித்து ஆய்வுமேற்கொள்ளும் போது பாரதியாரின் கவிதைகள் முதன்மையிடம் பெறுகின்றது. ஆனாலும் "சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழிந்த பின்னரே பெண்களின் சுதந்திரம், பெண்ணுரிமை பற்றிய கருத்துகள் விழிப்புணர்வு பெற்று வேர்விடத் தொடங்கியது"[44] என்பது பெண்ணியலாளர்களின் கருத்தாகும். அதாவது இன்றையப் பெண்ணிய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் விடுதலைப் போராட்டம் அடிப்படையாக அமைந்தது என்பதை வரலாற்று நூல்களின் வழியாக அறியலாம்.

### 2.7.2 விடுதலைக்குப் பின் பெண்ணியம்

இந்தியா, ஆண்கள்-பெண்கள் இருவரும் சேர்ந்து நடத்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பின்னர் விடுதலை பெற்றது. சுதந்திர இந்தியாவில் ஏற்படுத்திய இந்திய அரசியலமைப்புச்சட்டம் ஆணுக்கும்

பெண்ணுக்கும் சமத்துவ உரிமை வழங்கியுள்ளது. “இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் சமூக விதிகளுக்கும் சட்ட விதிகளுக்கும் பெருத்த முரண்பாடுகள் காணப்பட்டன”[45] அவ்வாறு இருந்தபோதும் சட்டவிதிகள், சமூகவிதிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றதாக வளர்ச்சியடைந்தது.

பெண்களுக்கு எதிரான வரதட்சனைக் கொடுமை, 1965-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வரதட்சனை ஒழிப்புச்சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டது. கருக்கலைப்பு செய்து கொள்ள சட்டம் அனுமதியளித்தது. கல்வியில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டது. கல்வி குறித்த விழிப்புணர்வையும் பெண்களுக்கு எற்படுத்தும் முயற்சியை அரசு மேற்கொண்டது. இதன் மூலம் அதிகப் பலனும் கிடைத்துள்ளது. பல்கலைக்கழகம் வரை பெண்கள் படித்து உயர்ந்தனர். தொழிற்கல்வியிலும் பெண்கள் பிரமிக்கத்தக்க சாதனைகளை ஏற்படுத்தினார்கள்.

சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரியாக ஜவகர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோருக்குப் பின்னர் இந்திரா காந்தி அவர்கள் நாட்டின் முதல் பெண் பிரதமராகப் பொறுப்பேற்றார். இது பெண்ணியத்திற்கும் பெண்ணியலாளர்களுக்கும் கிடைத்த மிகப் பெரும் சாதனையும் வெற்றியுமாகும். இந்திராகாந்தி அவர்கள் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் பெண்கல்விக்காக கொள்கை மாற்றங்களை ஏற்படுத்தினார். இருபது அம்சத்திட்டத்தின் மூலம் பெண்கள் கல்வி மீண்டும் ஒரு மறுமலர்ச்சியைக் கண்டது.

தமிழகத்தில் பெண்களின் கல்விக்காகக் குரல் கொடுத்தவர்களில் பாரதிதாசன் முக்கிய இடம் பெற்றவர் ஆவார். பாரதிதாசன் விடுதலைப் போராட்டக் காலக் கவிஞர். இவர் நாட்டின் விடுதலைக்குப் பின்னரும் சமுதாயம் குறித்த கவிதைகளை ஏராளமாகப் படைத்துள்ளார்.

“*படியாத பெண்ணினால் தீமை – என்ன*
*பயன் விளைப்பாள் அந்த ஊமை*

*நெடுந்தமிழ் நாடொறும் செல்வி – நல்ல*

*நிலைகான வைத்திடும், பெண்களின் கல்வி*”[46]

(பா.தா. இசையமுது)

“*கல்வி இல்லா*

*மின்னாளை வாழ்வில் என்றும்*

*மன்னாள் என்றே உரைப்பேன்*”[47]

(பா.தா. குடும்ப விளக்கு)

என்று பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். பெண்கள் இல்லறம் நடத்த அவசியத் தேவை கல்வி என்பதை

“*பெண்கட்குக் கல்வி வேண்டும்*

*குடித்தனம் பேணுதற்கே*

*பெண்கட்கு கல்வி வேண்டும்*

*மக்களைப் பேணுதற்கே*

*பெண்கட்கு கல்வி வேண்டும்*

*உலகினைப் பேணுதற்கே*

*பெண்கட்கு கல்வி வேண்டும்*

*கல்வியைப் பேணுதற்கே*”[48]

(பா.தா. குடும்ப விளக்கு)

என்ற கவிதையின் மூலம் கல்வியின் தேவையையும், அவசியத்தையும் எடுத்துரைக்கின்றார்.

பெண் குழந்தை பிறந்தால் பாவம் எனக்கருதும் சமுதாயத்திற்கு பெண்ணும் ஆணும் சமம் என்பதை

“*பெண்ணே பிறந்துவிட்டால்*

*கண்ணில் வைத்துக் காப்பேன் ஐயா*

*ஆணே பிறந்தால்*

*ஆணையும் அப்படி ஐயா வேற்றுமையில்லை*”[49]

எனக் கூறும் பாரதிதாசன், பெண்களே மூடத்தனத்தை எதிர்க்கத் தோன்றுகின்றவர்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

*"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற*
*காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே"*[50]

(பா.தா.பா.பெண்குழந்தை தாலாட்டு)

பெண்களைச் சமுதாயக் கட்டுப்பாடுகளால் அடக்கி வைக்கும் ஆணாதிக்கச் சமுதாயத்தைக் கடுமையாகச் சாடுகின்றார். கணவனை இழந்த பெண்ணைக் கைம்பெண் என்று கூறுவது போல் மனைவியை இழந்த கணவனை கைம்மை ஆண் என அழைக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். விதவைத் திருமணத்தை முழுமையாக ஆதரிக்கின்றார். இளம் வயதில் கணவன் இழந்துவிட்டால் அது பெண்ணின் குற்றமல்ல என்பதையும் கவிதையில் பதிவுசெய்கின்றார்.

*"எனை மணந்தார் இறந்தார்; என் குற்ற மல்ல,*
*இறந்தவுடன் மங்கல நாண், நல்லாடைகள்,*
*புனைமலர் குங்குமம் அணிகள் போன துண்டு;*
*பொன்னுடலும் இன்னுயிரும், போனதுண்டோ?*
*எனை ஆளும் காதலுக்கோர் இலக்கியத்துக்*
*கிசைந்ததெனில் உயிரியற்கை; நான் என் செய்வேன்*
*தனை யடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்*
*சுகம் இருந்தால் காட்டாயோநிலவே நீ தான்"*[51]

(பா.தா.பா.காதலைத் தீய்த்த கட்டுப்பாடு)

எனப் பெண்களுக்காகக் குரல் கொடுத்துள்ளார் பாரதிதாசன்.

இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியத்திற்குப் பாரதியாரும், பாரதிதாசனும் வழங்கிய கொடைகள் ஏராளம். இவர்கள் ஏற்படுத்திய பாதையில்தான் இன்றையப் பெண்ணியம் பயணிக்கின்றது. இன்றையப் பெண்ணியத்திற்கு விடுதலைப் போராட்ட இயக்கங்களும் விடுதலைக்குப் பின்னர் அமைந்த இந்திய அரசும் பேராதரவு வழங்கி உள்ளன.

### 2.7.3 இருபத்தோராம் நூற்றாண்டுகாலப் பெண்ணியம்

மனித சமுதாயம் தொடக்க காலம் முதல், பெண்களின் முயற்சியாலும் அவர்களின் உழைப்பினாலும் மாற்றம் பெற்று வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாகவே பெண்கள் நாகரிகத்தின் தொட்டில் எனப் போற்றப்படுகின்றார்கள். பெண்கள் முழுமையாக உரிமை பெற்றிருந்த தாய்வழிச் சமுதாயத்திலும் அவர்கள் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளால் அடிமைப் படுத்தப்பட்டிருந்த காலத்திலும் பெண்களின் தேவை என்பது சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் மிக இன்றியமையாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

தொடக்ககாலச் சமுதாயத்தில் பெண்கள் அவர்களது தேவையையும் சமுதாயத்திற்குத் தேவையான பணியினையும் உரிமையோடு அவர்களாகவே செய்தார்கள். ஆனால் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் தேவைகளையும், பணிகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, ஆணாதிக்கச் சமுதாயம் தனது தேவைக்கேற்ப நிறைவேற்றிக்கொண்டது. இதுபோல் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் பெண் சமுதாயம் பெண் விடுதலைக்காகவும், பெண் உரிமைக்காகவும் தொடர்ந்து போராடி வருகின்றது. அந்தப் போராட்டங்கள் மூலம் ஏராளமான உரிமைகளையும் பெண் சமுதாயம் பெற்றுவந்துள்ளது. அதன் உயர்ந்த வளர்ச்சி நிலையை இருபத்தியோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் பெற்றுள்ளது என்று கருதலாம்.

இருபத்தோராம் நூற்றாண்டு காலப் பெண்ணியம் என்ற இப்பகுதி

1. பண்பாட்டு விடுதலை
2. பொருளாதார விடுதலை
3. பாலியல் விடுதலை

என்ற தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### 2.7.3.1 பண்பாட்டு விடுதலை

சமுதாய அமைப்பு தோன்றியது முதல், பெண் பண்பாட்டு அடக்குமுறைக்கு ஆட்பட்டாள். அப்போது முதல் பெண்மைக்கான

பண்புகளை உருவாக்கியது ஆணாதிக்கச் சமுதாயம். மகளிர்க்கு இயற்கையாக அமைந்துள்ள பண்புகள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்று இறையனார் அகப்பொருள் கூறுகின்றது. இதுபோல் இலக்கியங்கள் தொடர்ந்து பெண்களுக்கான பெண்மைப் பண்புகளை வலியுறுத்தி வந்தன.

*"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்"*[52]

(தொல். நூ. கருஉ)

என்ற இத்தொல்காப்பிய நூற்பா பெண்கள் குறித்த தொல்காப்பியரின் கருத்தை வெளிப்படுத்துகின்றது. சிறந்த ஒழுக்கம், கற்பு, மென்மையான குணமும், பெண்மையின் பண்புகளாகக் குறிப்பிடுகின்றார் குழந்தைகளைப் பெற்றுத் தருவதன் மூலம் குடும்ப வளர்ச்சியை பெற்றுத்தருவதும் உறவினர்களைப் பேணுதலும் பெண்களின் கடமைகளாக வலியுறுத்தப்-படுகின்றது.

சிலப்பதிகாரம் பத்தினிப் பெண்டிர் பற்றிக் கூறுகின்றது. 'பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' என்று நாட்டின் சிறப்பைக் கூறுகின்றது அவர்கள் உள்ள நாட்டில் மழைவளம் பெருகும் என்பதையும் வலியுறுத்துகின்றது. மேலும்,

*"பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென*
*மாலை வெண்குடை மன்னவன் விரும்பி,*
*நூலறி புலவரை நோக்க-"*[53]

(சிலம்பு.கா.கா.பா.24)

என்று பத்தினிக் கடவுளை வணங்குவதாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள். இவ்வாறு கண்ணகியை பத்தினிக் கடவுளாக உருமாற்றுவதன் மூலம்

பண்பாட்டுக் கட்டுப்பாடுகளை பெண்ணினத்தின் மீது திணிப்பதாகவே பெண்ணியம் கருதுகின்றது.

பெண்ணினத்தின் மீதான இந்தப் பண்பாட்டுக் கட்டுப்பாடுகள் இலக்கியங்களின் மூலமாகத் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. "தியாகம், பிறநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்"[54] எனக் குறிப்பிடுகின்றார் திரு. வி. கலியாண சுந்தரனார். பெண்ணினத்தின் மீதான பண்பாட்டுக் கட்டுப்பாட்டு அடக்குமுறை நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது.

இருபத்தியோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் இந்தப் பண்பாட்டு அடக்கு முறையை முழு வேகத்துடன் நேரடியாக உடைத்தெறிகின்றது. இதை கவிஞர் பாலபாரதி 'சில பொய்களும் சில உண்மைகளும்' என்ற கவிதை நூலில் வெளிப்படுத்துகிறார்.

*"அச்சம்*
*மடம்*
*நாணம்*
*பயிர்ப்பு*
*போர்க்களத்தில் நிற்கும்*
*எனக்கு எதற்கு?"*[55]

என்ற கேள்வி எழுப்பி, பெண்மைக்கான பண்பாட்டுக் கட்டுப்பாடுகளை தனது கவிதையின் மூலம் உடைத்தெறிகின்றார் கவிஞர் பாலபாரதி. அத்துடன் பெண்ணின் நிலை இன்னும் போர்க்களத்தில் தான் உள்ளது என்பதையும் எதார்த்தமாக எடுத்துரைக்கிறார்.

பெண்கள் சுயமாகச் செயல்பட வேண்டும் ஆணாதிக்கச் சமுதாயத்தில் முழுமையாக ஆண்களின் கட்டுப்பாட்டில் வாழ்ந்தாலும் பாதுகாப்பு நிச்சயமின்மையை தனது கவிதையில் சுட்டிக்காட்டுகின்றார் கவிஞர் பாலபாரதி.

*“குடும்பம் துறந்த*
*சித்தார்த்தன்*
*புத்தனாக மாறினான்*
*நம்பி வந்த*
*யசோதா*
*என்ன ஆனாள்?”*[56]

என்ற கேள்வியின் மூலம் பெண்களை விழிப்படையச் செய்கின்றார் கவிஞர்.

பெண்ணியக் கவிஞர்கள், பெண்மீதான கற்பிதங்களைக் கட்டுடைக்கின்றார்கள். ‘பெண் புத்தி பின் புத்தி’ என்ற சொல்லாடல் நீண்ட காலமாகப் பெண்களை இழிவுசெய்யும் நிலையை மாற்றும் முயற்சியை மேற்கொள்கின்றார்கள். பெண்கள் ஆண்களைப் போல் சிந்திக்கத் தெரிந்தவர்கள், பகுத்தறிவுவாதிகள் என்பதை கவிஞர் சுல்பிகா தனது கவிதையில் குறிப்பிடுகின்றார்.

*“பார்த்தல் கேட்டல்*
*ருசித்தல் மணத்தல்*
*உணர்தல் இவற்றுடன்*
*பகுத்தறிதல் என்பனவும்*
*எமக்குண்டு”*[57]

என்று பாடுவதன் மூலம் பெண்களின் உள்ள உறுதியை எடுத்துரைக்கின்றார் கவிஞர்.

உணர்வுகளால் இனி எங்களைக் கட்டிவைக்க முடியாது. அதன் வலியை முழுமையாக மட்டுமல்ல அளவைத் தாண்டியும் அனுபவித்து-விட்டோம்; எனவே விடுதலையில் இருந்து எங்களை விலக்கி-விடமுடியாது என்பதை ‘வலியின் மொழி’ என்ற கவிதையின் மூலம் எடுத்துரைக்கின்றார் கவிஞர் திலகபாமா.

*“கும்பிட்டுக் கும்பிட்டு எமை*
*உணர்வுகளால் கல்லாக்கியது போதும்*

*ஓடவிட்டு ஓடவிட்டுக் கறைகழுவி*
*கடல் கலந்ததும் போதும்*

*நின்று எமை உணரவிடாது*
*ரங்க ராட்டினங்களாய்*
*வலித்த கையோடும்*
*சுற்றிவரும் ஆதிக்கக் கூட்டம்*

*என் உணர்வுகள் பேசப்பட்டால்*
*சுயமென உன் அங்கலாய்ப்புகள்*
*உனக்காக நான் சுயமிழப்பது*
*உன்மத்தமென நீ போட்ட திரைகள் கிழித்து*

*நாங்கள் நீட்டுவது சுட்டு விரல்களல்ல*
*எங்களைப் புரிய வைத்தலுக்கான கைகள்*
*உணர்வுகளை உணரவைப்பதற்கான*
*வலிகளின் வலிகளை அறிய*
*வைத்தலுக்கான மொழிகள்*

*மதுரை எரிக்க கண்ணகியாயும்*
*மீண்டும் எழுந்திட சீதையாயும்*
*எப்பவும் எரிதழல் மடிசுமப்பது இனி*
*எங்கள் வேலையல்ல*”[58]

இவ்வாறு பெண்களின் உணர்வுகளை எடுத்துரைக்கும் பெண்ணியப் படைப்பாளர்கள் ஆணாதிக்கச் சமூகத்தின் மீது கடுமையான தாக்குதலைத் தொடுக்கின்றார்கள்.

ஆண்களின் மகிழ்ச்சிக்காக இனி பெண்கள் அவர்களைத் தாழ்த்திக் கொள்ளவோ துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவோ தயார் இல்லை என்பதைப் பதிவு செய்கின்றார்கள். ஆண்களின் பண்பாட்டு அடக்கு-முறைகளுக்குக் கட்டுப்படப் போவதில்லை என்பதைக் கூறும் அதே வேளையில், உதாசீனப்படுத்தினால் இனி விட்டு வைக்கப் போவதில்லை எனவும் எச்சரிக்கின்றார்கள். இதில் பதில் தாக்குதல் கொடுப்போம் என்ற

எச்சரிக்கையையும் முன்வைத்துள்ளார்கள் என்பதையும் காணலாம். இதை கவிஞர் திலகபாமா தனது ‘எட்டாவது பிறவி’ கவிதைத் தொகுப்பில் ‘இனி’ என்ற கவிதையில் பதிவு செய்கின்றார்.

*“சிறைகளின் தாழ்களை நான்*
*தூர எறிந்த பிறகும் கூட*
*சாவிகளைச் சரியாகப்*
*பொருத்தத் தெரியவில்லை என உன் வாதம்*

*பூத்துக் காயாகிக் கனிந்து*
*வெடித்துச் சிதறி வெளியேறி*
*விதை தூக்கி வானில் பறக்க*
*பூப்பதெப்படி*
*பாலபாடம் சொல்லித் தருகிறாய்.*

*உடைத்துக் கொண்டு வந்த*
*கண்ணாடிச் சிறைக்குள்ளே*
*காயங்களுக்கும் கட்டிடவென்று*
*இன்னுமொருமுறை சிறைப்படச் சொல்கிறாய்*

*தராசுத் தட்டுகளில்*
*எனக்கான எடைகள் கூடியிருக்க*
*சமநிலை கேட்டு*
*என் எடை குறைக்கச் சொல்கின்றாய்*

*என் உணர்வுகளைச் சிதைக்கும் உன்*
*செயல்களும் வார்த்தைகளும்*
*விழிப்பார்வைகளும், ஏன்*
*உதாசீனங்களையும் கூட*
*விட்டுவைப்பதாய் இல்லை இனிநான்”.*[59]

இந்தச் சமுதாயம் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டு அடக்கு முறைக்கு எதிராக உரத்த குரலில் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்கள் பெண்ணியப் படைப்பாளர்கள். இதன் காரணமாக முழுமையான பெண் விடுதலையைச்

சமுதாயம் பெறவில்லை. குறிப்பாக, பெண்ணியப் படைப்பாளர்களே சமுதாய அடக்கு முறைக்கு ஆட்படுகின்றார்கள். அவர்களது தனிப்பட்ட கொள்கைகள் சமுதாயத்தால் மறுக்கப் படுகின்றன. திருமண பந்தத்தில் இணையும் போது புரட்சிகரமான பெண்ணியப் படைப்பாளர்களும் சமுதாயக் கட்டுப்-பாடுகளுக்கு ஆட்படும் சூழல் ஏற்பட்டுவிடுகிறது. கவிஞர் தாமரை 'தொலைந்து போனேன்' என்ற கவிதையில் தனது மணவாழ்வு பற்றிப் பதிவு செய்கின்றார்.

*"என் மணவிழாவில்*
*நான் தொலைந்து போனேன்*
*ஆனால் யாரும் என்னத் தேடவில்லை"*[60]

என்ற கவிதையின் மூலம் பெண்களின் திருமணம் அவர்களது வாழ்வில்பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றது என்பதைக் குறிப்பிடுகிறார். கவிஞர் சல்மா தனது "திருமணத்திற்குப் பிந்தைய காலங்களில் எனது இலக்கிய ஆர்வமும் எழுத்தும் வெவ்வேறு காரணங்களினால் என் கணவரால் தடை செய்யப்பட்டன"[61] என்று தனது மணவாழ்வு பற்றிப் பதிவு செய்துள்ளார்.

பெண்ணியப் படையாளியான கவிஞர் சுகிர்தராணி படைப்பாளியின் மணவாழ்வுபற்றி தனது கவிதைகளில் பதிவு செய்கின்றார்.

*"ஆரம்பமாயிற்று*
*என் மீதான விசாரணை*
*நடக்க வைத்துப் பார்த்ததில்*
*புன்னகை பூத்தனர் என்னைப் பிடித்திருப்பதாய்*
*நீண்டிருந்த பட்டங்களைக் கேட்டபடி*
*சிற்றுண்டித் தட்டுகள் தேநீர்க் கோப்பைகளும் காலியாயின*
*பற்றியிருக்கும் என் அரசுப் பணியை அறிந்ததும்*
*கைகளில் திணித்தனர் தாம்பூலத்தை*
*சம்பள விவரத்தைப் பட்டியலிட*
*குறித்தே விட்டனர் கல்யாணத் தேதியை*

*எதற்கும் இருக்கட்டுமென*

*கவிதை எழுதுவதை கடைசியில் சொல்லி வைத்தேன்*

*வந்தவர்கள் எழுந்தனர்*

*வாயிலை நோக்கி”*[62]

இன்றையப் பெண்ணியப்படைப்பாளர்கள் பலவிதமான சமுதாயத் தாக்குதலுக்கு ஆட்படுகின்றார்கள். அவர்களை “ஒழுக்கக் கேடானவர்களாக, அடக்க ஒடுக்கம் அற்றவர்களாக குடும்பத்துக்கு ஒத்துவராதவர்களாகத்தான் பார்க்கின்றார்கள்”[63] என்று சமூகத்தின் வெளிப்பாட்டைக் கூறுகின்றார் இக்கவிதையின் படைத்துக் காட்டுகிறார் கவிஞர் சுகிர்தராணி.

சமுதாயம் இன்றும் கட்டுப்பாடுகள் நிறைந்ததாகவும் குறைகளைத்தேடி அலையும் குணமுள்ளதாகவும் இருக்கின்றது. இதனால் பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் வயிற்றில் ‘நெருப்பைச் சுமந்து’ கொண்டு தான் வாழும் நிலை உள்ளது. இதை தனது ‘அம்மா’ என்ற கவிதையில் பதிவுசெய்கின்றார் கவிஞர் பிருந்தா.

*“பாவம் இந்த அம்மாக்கள்*

*எப்பவும் வயிற்றில்*

*நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்கிறவர்கள்*

*வாசல் நிலையில் காத்திருந்து*

*தொங்கிப் போனவர்கள்*

*நாலுபேருக்கு – அவர்களின்*

*நாக்குகளுக்குப் பயப்பட்டு சாகிறவர்கள்*

*கால்மடக்கி பேப்பர் படிக்கிற*

*கம்பீர அப்பாவுக்கு காஃபி தருகிறவர்கள்*

*ரேங்க் கார்டுகள் கையெழுத்துக்கு*

*அப்பாவிடம் பரிந்துரைப்பவர்கள்*

*அப்புறம் அதைச் சொல்லியே பயமுறுத்துவார்கள்*

*மேலும் நிகழ்வுகளில்*

*வயிற்றில் நெருப்புக் கங்குகளால்*

*தன் மகள்களை தீய்க்கத் தயங்காதவர்கள்”*[64]

தாயின் தவிப்பைச் சொல்லும் அதே வேளையில், தாயின் செயல்பாட்டால் மகளுக்கு ஏற்படும் மனக்காயத்தையும் எடுத்துரைக்கின்றார்.

இருபத்தியோராம் நூற்றாண்டுக் கவிதைகளில் பெண்விடுதலை குறித்து துணிச்சல் மிக்க கவிஞர்களால் ஏராளமான கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இக்கவிதைகளின் மூலம் பெண்ணியம் தனது வீரியத்தை வெளிப்படுத்திக்கொண்டுள்ளது. ஆனால் அதன் காரணமாகப் பெண்கள் சமுதாய அடக்குமுறைகளில் இருந்து முழுமையாக விடுதலை பெற்றுவிட்டதாகக் கூற முடியாது. சமுதாயம் பண்பாட்டு அடக்குமுறையை மேலும் அதிகப்படுத்தியே உள்ளது. இதைப் பெண்ணியப் படைப்பாளர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் மூலமாக அறியலாம். இது போன்ற சமுதாய அடக்குமுறை பெண்ணியத்தைத் தொடர்ந்து கட்டுப்படுத்தி வைக்க முடியாது.

பெண்ணியப் படைப்பாளர்களின் படைப்புகளின் மூலம் பெண் விடுதலை முழுமை பெறும் காலம் விரைவில் ஏற்படும் என்பது பெண்ணியப் படைப்பாளர்களின் நம்பிக்கையாகும் இதுவே சமுதாயம் எடுத்துரைக்கும் உண்மையும் ஆகும்.

### 2.7.3.2 பொருளாதார விடுதலை

இந்தச் சமூகத்தில் பெண்கள் கட்டுப்பாடுகளற்ற முழுமையான உரிமை பெற்றவர்களாக வாழ்ந்து வந்தவர்கள். அந்த சுதந்திரப் பெண்களை ஆணாதிக்கச் சமுதாயத்திடம் அடிமைப்பட வைத்தது பொருளாதார நிலையாகும். ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் வழிநடத்திச் செல்வது அவனுடைய பொருளாதார நிலைப்பாடாகும். ஆனால் தேவைக்கு அதிகமாகப் பொருள் வைத்திருப்போர் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் நிலையும் உள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்காக ஆண்கேளாேடு பெண்களும் சேர்ந்து போராடும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் மேலை நாட்டின் தாக்கத்தால் தொழில்புரட்சி ஏற்பட்டது. "தொழிற்சாலைகளில் உற்பத்திப் பெருக்கத்தின் பொருட்டு பெண்களும் வேலைக்குச் செல்ல நேர்ந்தது பெண்களை அடிமையாக்கி வைத்திருந்த நிலவுடைமைச் சமுதாயம் வலுவிழந்தது".[65] பெண்கள் பொருள் ஈட்டுபவர்களாக மாறத்தொடங்கியது முதல் விடுதலையும் சுதந்திரமும் பெற்றார்கள். சமுதாயக் கட்டுப்பாடுகள், பொருளீட்டும் பெண்களிடம் தளர்ச்சியுறத் தொடங்கியது. பெண்கள் சுயமாக முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றார்கள். ஆணாதிக்கச் சமுதாயம் பொருளீட்டும் பெண்களிடம் சமரசம் செய்துகொள்ளத் தொடங்கியது. இதன் மூலம் வீட்டைவிட்டு வெளியில் வந்த பெண்கள் கல்வியில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். கல்வி, பெண்களுக்கும் கட்டாயத் தேவையானது. கல்வியின் மூலம் பெண்களின் நிலை பெரிதும் மாற்றம் பெற்றது.

பெண்கள் பொருளீட்டும் முயற்சியாக பணிக்குச் செல்லத் தொடங்கியதும், பல புதுவிதமான பிரச்சனைகளையும் எதிர்-கொண்டார்கள். சகபணியாளர்கள், மேல் அதிகாரிகள் ஆகியோரிடம் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆட்பட்டார்கள். பணி செய்யும் பெண்களுக்குப் பாலியல் துன்புறுத்தல், நாள்தோறும் எதிர்கொள்ள வேண்டிய அன்றாட பிரச்சினை ஆகி உள்ளது. அத்துடன் பெண்களின் உடல்ரீதியான பிரச்சினைகளும் பெண்களுக்குப் பணியிலே இடர்ப்பாட்டை ஏற்படுத்துகின்றன. இந்த உடல் ரீதியான பிரச்சினையை கவிஞர் வெண்ணிலா தனது 'தாயின் வாசம்' கவிதையில் பதிவு செய்கின்றார்.

> "*மணமிக்க*
> *பூச்சூடிக் கொள்கிறேன்*
> *கூடுதலாய்*
> *முகப்பவுடரும்*
> *புடவைகளுக்குக்கூட*

*வாசனைத் திரவியம்*

*பூசி வைத்துள்ளேன்*

*அத்தனையும் மீறி*

*ஆடைக்குள்ளிருந்து*

*தாயின் வாசம்*

*சொட்டுச் சொட்டாய்*

*கோப்புகளில் இறங்குகிறது*

*அவசரமாய்*

*அலுவலகக் கழிப்பறையில் நுழைந்து*

*பீச்சிவிடப்படும் பாலில் தெறிக்கிறது*

*பசியைத் தின்று அலறும்*

*குழந்தையின் அழுகுரல்*”[66]

அதாவது பணியில் இருக்கும் ஒரு தாயின் தவிப்பை இந்தக் கவிதையில் வடித்துக் காட்டியுள்ளார்.

பொருளாதார நிலையைச் சரிசெய்யும் பொருட்டு பணிக்குச் செல்லும் பெண்கள் சமுதாயத்தாலும் சுற்றுப்புறத்தாலும் உடல் ரீதியாகவும், உறவுகள் காரணமாகவும் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். ஆனால் பொருளாதார நிலைப்பாடு பெண்ணிற்கு ஒரு முழுமையான விடுதலையைப் பெற்றுத் தருகின்றது என்பது உண்மையாகும். பெண்களின் விடுதலையை பொருளாதாரமும் நிர்ணயம் செய்கின்றது என்பது சமுதாயம் காட்டும் உண்மை எனலாம்.

குடும்பத்தின் பொருளாதார நிலையைச் சமன் செய்ய பெண்களை வேலைக்கு அனுப்பும் ஆண்கள், அவள் பணிசெய்யும் இடத்திலும், சமுதாயத் தொடர்புகளிலும் எப்படிச் செயல்படுகின்றார் என்பதை வேவு பார்க்கின்றார்கள். இது பெண்ணின் மன உறுதியையும் அவளது நேர்மையையும் அவமானப்படுத்துவதாக உள்ளது. இதைக் கவிஞர் பாலபாரதி தனது ‘நான் ஒரு பெண்ணல்லவா?’ என்ற கவிதையில் முன்வைக்கின்றார்.

*"காலிலே சலங்கை பூட்டி*
*கோயிலிலே*
*ஆடவீட்டீர்கள்*
*முதுகிலே சூடு வைத்து*
*அந்தப்புரத்துக்குள்*
*அனுப்பினீர்கள்*
*உப்பில்லா உணவு கொடுத்து*
*மூலையிலே*
*அமர்த்தினீர்கள்*
*சந்தேகம்*
*வந்தபோதெல்லாம்*
*நெருப்பிலே இறக்கினீர்கள்*
*இன்று*
*வேலைக்கு அனுப்பிவிட்டு*
*வேவு பார்க்கிறீர்கள்"*[67]

இக்கவிதை, பெண்களுக்குச் சமுதாயத்தால் ஏற்படும் உளவியல் உடலியல் கொடுமைகளை விளக்குகின்றது.

### 2.7.3.3 பாலியல் விடுதலை

பெண் சமுதாயம் ஆணாதிக்கத்தால் கட்டுப்படுத்தப்படும் இடம் பாலியல் உறவு என்பது பெண்ணியலாளர்களின் கருத்தாகும். பாலியல் உறவால் உடல் ரீதியாக ஏற்படும் மாற்றங்கள்-பாதிப்புகள் ஆண்களை விட பெண்களுக்கே அதிகமாக ஏற்படுகின்றது. இதன் காரணமாகப் பெண்கள் பெரிதும் உதாசீனப்படுத்தப்படுகின்றார்கள். மேலும் பாலியல் உறவில் பெண்களின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற எண்ணம் கருத்தியல் அளவில் கூட இல்லாமல் இருக்கிறது. இது பெண்ணியலாளர்கள் மட்டுமல்லாது, சாதாரண பெண்களைக் கூட பாதிக்கின்றது. இது பற்றிய கேள்விகளும் எதிர்ப்புகளும் இப்போது வெளிப்படத் தொடங்கி உள்ளன.

பெண்கள், குழந்தைகளைப் பெற்றெடுப்பது மட்டும்தான் அவர்களது வாழ்வியல் கடமை எனச் சமுதாயம் கட்டமைத்துள்ளது. ஆனால் "குழந்தைகளைப் பெறுவது என்பது பெண்களுடைய உயிரியல் உரிமையாகும். இந்த உரிமைக்கு எப்போது அர்த்தம் ஏற்படுகின்றதென்றால், குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிப்பது நாங்களாக இருக்கும்போது மட்டுமே"[68] என பாலியல் உறவிற்கு ஒரு கட்டுப்பாட்டை வைக்கின்றார்கள். அவ்வாறு உரிமையைப் பெறுவதே பாலியல் விடுதலையாக இருக்க முடியும் என்பது பெண்ணியலாளர்களின் கருத்தாகும்.

பாலியல் உறவில் பெண்களின் உணர்வுகள் பறிக்கப்படும்போது, இல்லற வாழ்வும் குடும்ப உறவுகளும் பெண்ணின் மனதிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றது. இதை கவிஞர் சல்மா தனது, 'சுவாசம்' கவிதையில் பதிவு செய்கின்றார்.

*"எப்பொழுதும்*
*எனது எல்லாக் காரியங்களும்*
*நான் இல்லாத போதே*
*நிகழ்ந்து விடுகின்றன*

*ஒவ்வொரு முறையும்*
*எதையும்*
*ஸ்பரிசித்து உணர்வதற்குள்*
*அவை நிகழ்ந்து முடிகின்றன*

*நான்*
*முயன்றுதான் பார்க்கிறேன்*
*என்றாவது*
*எதுவாயினும்*
*நிகழ்வதற்கு முன்பே*
*நான் அதைத் தொடுவதற்கு*

*ஆயினும்*
*என் முயற்சிகளைத் தோற்கடித்து*

*எனக்காக நிகழும் அவை*

*நானில்லாமலேயே நடந்துவிடுகின்றன*

*மலர்கள்*

*மனிதர்களுடனான*

*உலகம்*

*மிகப்பெரியது*

*என்னை விட*

*நான் அனுமதிக்கத்தான் வேண்டுமா*

*என சுவாசம்*

*நானின்றி நிகழ்வதை*"[69]

அதாவது அனுமதி இல்லாமல் நடைபெறும் மீறல்கள், எந்த உறவையும் விலக்கி வைக்கவே வழிவகுக்கும். அதிலும் பாலியல் உறவு உணர்வுகளால் ஈர்க்கப்படக் கூடியது. உணர்வுகளின் ஒன்றுபடுதலே பாலியல் உறவை முழுமையான அர்த்தம் உடையதாகச் செய்யும்.

பெண்கள், உணர்வுகளால் ஒன்றுபடும்போதும் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் போதும் ஆண்களுக்காக எந்தவித துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே உள்ளனர். ஆனால், உதாசீனப்படுத்தும் போது கால்களால் எட்டி உதைக்கவும் தயங்கமாட்டோம் என்பதை 'மென் பாதங்கள்' என்ற கவிதையில் பதிவுசெய்கின்றார் கவிஞர் தாமரை.

"*என் கால்கள்*

*முட்களின் கூர்மையைத் தாங்காது*

*ஆனால் என் கால்களை*

*முத்தமிடுவதை நீ விரும்பினால்*

*சாகும் வரை அதில் நடனமாடுவேன்*

*முட்கள் எனக்குப் பொருட்டல்ல*

*ஆனால் உன் கோழைத்தன்மையை*

*என் கால்கள் பொறுத்துக் கொள்வதேயில்லை*

*மிதித்து அழிக்கவே விரும்புகின்றன*

*காதலை சில சமயம்*

*கால்களும் தீர்மானிக்கின்றன*”[70]

- என்று உணர்வுகள் மதிக்கப்படாதபோது அவை சமூக நாகரிகத்தின் மீதும் பிரதிபலிக்கின்றது. பாலியல் உறவுகளில் ஏற்படும் சிக்கல்களே ஒருபால் உறவிற்கு வழிவகுக்கின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் தனித்துவம் வாய்ந்ததாகவே வளர்ந்து வருகின்றது. சமுதாயத்தில் பெண்ணியத்திற்கு ஏற்பட்டுள்ள தடைகள் எவை என்பதைக் கண்டறிந்துள்ளது. பண்பாடு, சமயம், கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, அரசியல், அதிகாரம், மற்றும் பாலியல் என அவற்றைப் பட்டியலிடுகின்றது. அவ்வாறு பட்டியலிட்டுள்ள தடைகளில் இருந்த விடுதலை பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இன்றையப் பெண்ணியம்.

பெண்ணியம் இன்று எதிர் கொண்டுள்ள தடைகளில் இருந்து விடுதலை பெறும் வழிகளையும் இன்றையப் பெண்ணியம் கண்டறிந்துள்ளது. அதன் ஒரு பகுதியே பெண்ணியம் குறித்தப் படைப்புகள். இன்றையப் பெண்ணியப் படைப்பாளர்கள் அவர்களது படைப்புகள் மூலம் பெண்விடுதலை, பெண் உரிமைகளுக்குக் குரல் எழுப்புகின்றார்கள்.

பெண்ணியப் படைப்பாளர்கள் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏராளமான இடர்ப்பாடுகளை எதிர் கொண்டுள்ளனர். ஆனால் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு கொள்கையைப் போற்றி வருகின்றார்கள். இது போன்ற போராளிகளைக் கொண்ட பெண்ணியம் அது எதிர்பார்க்கும் விடுதலையை, உரிமைகளை விரைவில் முழுமையாக வென்றெடுக்கும் என்பதில் ஐய்யப்பாடு இருக்கமுடியாது.

## 2.8 தொகுப்புரை

2.8.1 உலகில் மனிதன் சமுதாயமாக வாழத் தொடங்கியதுமுதல், உடல் வலிமையால் இயல்பிலேயே சமூக முன்னுரிமை பெற்றிருந்த பெண்களை, மகப்பேறு முதலிய காரணங்களால் பின்நிலைக்குத் தள்ளினான்.

2.8.2 பெண்விடுதலை என்பது ஆண்களை மறுப்பதல்ல, பதிலாக அவர்களுக்கு எதிராகச் செயல்படாமல், இணைந்து பங்காற்றுவதைக் குறிக்கிறது. மேலும் பெண்களுக்கு எதிராக இருக்கும் எதையும் முறியடித்து முன்னேறிச் செல்வதைக் குறிக்கிறது.

2.8.3 இந்தியப் பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக இருந்தாலும் அடக்குமுறை, கட்டுப்பாடு போன்ற காரணங்களால் பண்பாட்டு அடக்குமுறைக்கு உள்ளானார்கள். வேதகாலங்களில் பெண்கள், சமூகத்தின் எல்லாவிதமான சமூக நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப் பட்டனர். இல்லறத்தினர் தவம் செய்யச் சென்றால் கூட மனைவியோடுதான் செல்லவேண்டும் என்ற நிலை இருந்தது. மேலும் வேத, இதிகாசகாலத்தில் கல்வி, இலக்கியம், தத்துவம் முதலிய போட்டிகளில் பெண்கள் சிறந்து விளங்கியதைக் காண முடிகிறது.

2.8.4 சங்ககாலமென்று அறியப்படுகின்ற காலக்கட்டங்களில் பெண்கள் பெரும் புலவர்களாக இருந்துள்ளதையும் பாலின வேறுபாடின்றி பல்வேறு வகையான சமயங்களும் பெண்களைச் சமயப் பணியாற்றவும் அனுமதித்துள்ளதையும் அறியமுடிகிறது. மேலும் போர் மற்றும் பல்வேறு சமூகக் கடமைகளில் ஈடுபட்ட பெண்கள், உரிமைகள் மறுக்கப்பட்டு பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

2.8.5 தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் பெண்கள் சித்தரிக்கப்-பட்டுள்ளனர். கல்வி, கற்பு, சமூகக் கடமைகள் முதலியவற்றின் அடிப்படையில் பெண்களுக்கான கருத்தியல்களை திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்ற இலக்கியங்கள் கட்டமைத்துள்ளன. கல்வி, கற்பு, பிறனில் விழையாமை முதலிய விழுமியங்களைப் பெண்களுக்கு திருக்குறள்

முன்மொழிவதைக் காணலாம். சமூகம் மற்றும் குடும்பநிலைகளில் ஆண்களால் அடக்கு முறைக்கு உள்ளான பெண், தன் உரிமையைக் கேட்டுப்பெறும் நீதி வேண்டிக் குரல் கொடுப்பவளாகவும் பெண்நினைத்தால், அரசும் அவளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதையும் சிலப்பதிகாரம் முன்வைக்கின்றது.

2.8.6 சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பதிலும் சமயவாதிகளாக வாழ்வதிலும் பெண்கள் முன்னின்றதையும் இலலறம் மீறும் உரிமை பெண்களுக்கு இருந்துள்ளதையும் பெரியபுராணம் காரைக்காலம்மையார் போன்ற பெண் ஆளுமைகள் காட்டுகின்றன.

2.8.7 இந்தியாவில் பெண்ணியச் சிந்தனைகள் மேலை நாட்டுத் தாக்கத்தால் ஏற்பட்டதாகும், இந்திய வரலாற்றோடும் இந்திய சுதந்திரப் போராட்டச் சூழலோடும் வளர்ந்து உருவான பெண்ணியச் சிந்தனைகள் பெண்களின் முன்னேற்றத்தை முன்மொழிந்தது. அன்னிபெசன்ட் தோற்றுவித்த இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு, பெண்களின் ஓட்டுரிமைக்காக சரோஜினி நாயுடு தலைமையில் தொடங்கப்பட்ட போராட்டம், 1923 ரோம் நகரில் நடந்த சர்வதேசப் பெண்கள் போராட்டம் போன்றன குறிப்பிடத்தக்க பங்காற்றின. இதனை அடியொற்றி இந்தியப் பெண்ணியலாளர்கள் செயல்படத் தொடங்கினார்கள்.

2.8.8 இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியலாளர்கள் இன்றைய சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழல்களின் அடிப்படையில் தங்கள் போராட்ட வடிவங்களை மாற்றினர். சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களில் இடஒதுக்கீடு கோருதல், அரசியல், பொருளாதாரத் தளங்களில் ஆளுமை செய்தல் எனப்பல நிலைகளில் பங்கெடுக்கத் தொடங்கினர்.

2.8.9 இந்தியாவில் ஆங்கிலேயர்களின் வருகையால் உருவான சமுதாய, சமய, அரசியல் அமைப்புகளில் பெண்கள் பங்கெடுக்கத் தொடங்கினர். விடுதலைப் போராட்டக் காலங்களில் பெண்கள் பங்குகொண்டனர். மேலும் குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்தல், விவாகரத்து உரிமை,

திருமணத்திற்குப் பெண்களைக் கட்டாயப் படுத்துதல், தனியாக வாழ அனுமதித்தல், அரசுப் பணிகளில் இடம் அளித்தல் முதலிய பல உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இயக்கங்கள்-போராட்டங்கள் நிகழ்த்தினர்.

2.8.10 இந்திய விடுதலைக்குப் பின் ஆணைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கும் நிலை உருவானது. வரதட்சனை ஒழிப்புச் சட்டம் (1965), இருபது அம்சத்திட்டத்தின் மூலம் பெண்கல்வி முன்னேற்றம் போன்ற சட்டவரைவுகள் பெண்களுக்கான உரிமையை முன்வைத்தன.

2.8.11 இருபத்தோராம் நூற்றாண்டு காலப் பெண்ணியம் பண்பாட்டு விடுதலை, பொருளாதார விடுதலை, பாலியல் விடுதலை என்றிவற்றை முன்வைத்து இயங்கியது. பெண்களுக்கு சிறந்த ஒழுக்கம், கற்பு, மென்மையான குணம், குழந்தை பெற்றுத்தருதல், உறவினர்களைப் பேணுதல் முதலிய குணங்கள் இருக்க வேண்டுமென்ற பண்பாட்டுக் கட்டுப்பாடுகளைச் சமூகம் திணித்தது, இதுபோன்ற பண்பாட்டு அடிமைத் தனங்களைப் பெண்கள் மீறுபவர்களாக இருந்தார்கள்.

2.8.12 பெண்கள் குறித்த ‘பெண்புத்தி பின்புத்தி’ போன்ற சமூகச் சொல்லாடல்களைப் புறக்கணிப்பதையும், பகுத்தறிவு கொண்டு எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் குணத்தையும்; ஆண்களின் மகிழ்ச்சிக்காகப் பெண்கள் தங்களின் இயல்புகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும், தங்களைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்பன போன்ற சமூக வரையறைகளை மீறுபவர்களாகவும், எதிர்த்தாக்குதல் தொடுப்பவர்களாகவும் மாறுவதை சுகிர்தராணி, திலகபாமா, பிருந்தா, தாமரை போன்ற கவிஞர்கள் தங்கள் படைப்புகளில் முன் வைத்துள்ளனர்.

2.8.13 பொருளாதார உயர்வுக்காக ஆண்களைப் போலவே பெண்களும் உழைக்கத் தொடங்கினர். பொருளீட்டத் தொடங்கியதால் விடுதலையை முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றவர்களாகவும் மாறினர். கல்வி கற்றதானலும் பொருளீட்டியதாலும் ஆண் சமுதாயம், பெண்களோடு சமரசம் செய்து

கொண்டு வாழத் தொடங்கியது. பெண்கள் பொருளீட்டத் தொடங்கியதால் பாலியல் தொடர்பான பல்வேறு சிக்கல்களைச் சந்திக்கத் தொடங்கினர்.

2.8.14 உடல் அமைப்பால் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் உடைய பெண்கள், உடல் - உள்ள ரீதியாக ஆண்களால் ஏற்படும் பாதிப்புகளை நீக்க முற்பட்டனர். குறிப்பாக குழந்தைப் பேறு பெண்ணின் விருப்பத்திற்கிணங்கவே நிகழவேண்டும் என வலியுறுத்தினர். பாலியலை அடிப்படையாக வைத்து எழும் கற்பு எனும் கருத்தை இருவருக்கும் பொதுவாக வைத்துப்பார்க்க வேண்டும் என்கின்றனர்.

## குறிப்புகள்

1. என்.கே. அழகர்சாமி, பெரியபுராணத்தில் திருக்குறளின் தாக்கம், ப.68.
2. வாசுகி ஜெயரத்னம், பெண்ணியச்சுவடுகள், ப.51.
3. க.ஜெயசீலி, திலகவதியின் புதினங்களில் பெண்ணியம், ப.29.
4. மேலது, ப.28.
5. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, பெண்ணும் பெண்மையும், ப.15.
6. வாசுகி ஜெயரத்னம், மு.நூ., ப.29.
7. மேலது, ப.51.
8. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ.), பெண்ணியம், ப.11.
9. மேலது, ப.16.
10. இரா. ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.25.
11. சித்து. மா. சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.167.
12. மேலது. ப.167.
13. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.28.
14. மேலது, ப.29.
15. மேலது, ப.20.
16. மேலது, ப.30.
17. தமிழச்சி தங்கப்பாண்டியன், வனப்பேச்சி, ப.63.
18. சுகிர்தராணி, அவளை மொழிபெயர்த்தல், ப.26.

19. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ.), மு.நூ., ப.48.

20. மேலது, ப.49.

21. மேலது, ப.49.

22. மேலது, ப.51.

23. நா. சுப்ரமணியன், சங்ககால வாழ்வியல், ப.348.

24. சு.சண்முகசுந்தரம், மு.நூ., ப.59.

25. மேலது, ப.9.

26. சித்து. மா. சாலமன், மு.நூ., ப.44.

27. நா. ஜெயபாலன், பெண்ணினம் ஓர் ஆய்வு, ப.24.

28. மேலது, ப.22.

29. மேலது, ப.20.

30. என்.கே. அழகர்சாமி, மு.நூ., ப.46.

31. மு.வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.210.

32. என்.கே. அழகர்சாமி, மு.நூ., ப.52.

33. நா. சுப்பிரமணியன், மு.நூ., ப.349.

34. சிலம்பு. ந. செல்வராசு, வள்ளுவப் பெண்ணியம், ப.10.

35. நா. ஜெயபாலன், மு.நூ., ப.24.

36. என்.கே. அழகர்சாமி, மு.நூ., ப.47.

37. அ. மாணிக்கனார் (உ.ஆ), பெரியபுராணம், ப.56.

38. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.47.

39. சித்து மா. சாலமன், மு.நூ., ப.111.

40. நா. ஜெயபாலன், மு.நூ., ப.72.

41. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.105.

42. மேலது, ப.105.

43. மேலது, ப.107.

44. வாசுகி ஜெயரத்னம், மு.நூ., ப.102.

45. நா. ஜெயபாலன், மு.நூ., ப.108.

46. பாரதிதாசன், இசையமுது, ப.49.

47. பாரதிதாசன், குடும்பவிளக்கு, ப.70.

48. பாரதிதாசன், மு.நூ., ப.69.

49. தொ. பரமசிவன் (தொ.ஆ), பாரதிதாசன் பாடல்கள், ப.207.

50. மேலது., ப.108.

51. மேலது, ப.73.

52. நச்சினார்க்கினியர் (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக்.241,242.

53. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), சிலம்பு., வஞ்சிக்காண்டம், ப.27.

54. திரு. வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, ப.16.

55. சூரிய சந்திரன் (தொ.ஆ.), அறையின் இருளில் காடு மணத்துக் கிடந்தது, ப.114.

56. மேலது, ப.116.

57. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ.), காலச்சுவடு பெண் படைப்பாளர்கள் 1994-2004, ப.98.

58. திலகபாமா, எட்டாவது பிறவி, ப.1.

59. மேலது, ப.4.

60. சூரியசந்திரன் (தொ.ஆ.), மு.நூ., ப.30.

61. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ.), மு.நூ, ப.91.

62. சூரியசந்திரன் (தொ.ஆ.), மு.நூ., ப.30.

63. மேலது, ப.72.

64. மேலது, ப.48.

65. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ.), மு.நூ., ப.116.

66. சூரியசந்திரன் (தொ.ஆ.), மு.நூ., பக்.21-22.

67. மேலது, ப.117.

68. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ.), மு.நூ., ப.127.

69. சல்மா, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், ப.16.

70. சூரியசந்திரன் (தொ.ஆ.), மு.நூ., ப.26.